Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00




தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (30.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 061



வெற்றி 09



எண்ணிக்கையை அறிய... 10



திருட்டு! 13



முடியாது! 14



குடியேற்றம்! 18

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்; யாழ். மீனவர்கள் திரண்டு போராட்டம்




(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டிவரும் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் நடவடிக்கைகளை இலங்கை, இந்திய அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரி யாழ். நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.

யாழ். புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயத்தில் ஒன்று கூடிய கடற்றொழிலாளர்கள் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்து நடத்தினர். பல நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பங்குபற்றிய இந்தப் பேரணியில் இலங்கை, இந்திய அரசுகளைத் தமது கடறபரப்பில் எல்லை மீறிவரும் இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் பதாகை மற்றும் சுலோக அட்டைகளை

19 ஆம் பக்கம் பார்க்க

## விஸ்வரூபம் எடுக்கிறது டெங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன், வியாழன் ஆகிய இருதினங்களில் நான்கு இராணுவத்தினர் உட்பட 12 பேர் டெங்கு நோய்த தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை திருநெல்வேலி இராணுவ முகாமில் இருந்து நான்கு இராணுவத்தினரும் நேற்று வியாழக்கிழமை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து நால்வரும், சண்டிலிப்பாய், கோப்பாய், மற்றும் யாழ். மாநகர சபைப் பகுதியில் இருந்து தலா ஒவ்வொருவருமாக இரு நாட்களில் இந்த 12 பேரும டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. (பா)

## பல்கலைக்கழக ஊழியர் பணிப்புறக்கணிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று நண்பகலிலிருந்து அரைநாள் பணிப்புறக்ணிப்பை மேற்கொள்ளவுள்ளது. கடந்த 27, 28 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக பிரதான வளாகம், மருத்துவபீடம், மாணவர் விடுதிகள் ஆகியவற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் மாணவர்களின் பாதுகாப்பை கேள்விக்குரியதாக்கியுள்ளது. இந்த இரு தினங்களிலும் முழுநேர அலுவலர்களான பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரும் பிரதிப்பதிவாளரும்அலுவலகத்தில் பிரசன்னமாக இருக்காமை

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவை நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியாது



நாடாளுமன்றத்திற்கோ, தனக்கோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களுக்கோ வெளி அமைப்புக்கள் கட்டளையிடவோ, உத்தரவிடவோ முடியாது எனத் தெரிவித்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் ஷராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான தெரிவுக் குழுவின்ரைக் குறித்து நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட பரிந்துரையை நிராகரித்தார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளை ஒத்திவைக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் சபாநாயகருக்கும் தெரிவுக் குழு உறுப்பினர்களுக்கும் பரிந்துரை செய்திருந்தது.

இந்நிலையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். தெரிவுக்குழுவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை ஆராய்ந்ததன் பின்னரே தெரிவுக்குழு விசாரணைகளை ஒத்திவைக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் பரிந்துரை செய்தமை குறிப்பிடத் தகககது.

## வதிவிட அனுமதிக்கு புதிய விதிமுறைகள் பிரான்சில் அறிமுகம்

பிரான்ஸில் வதிவிட அனுமதியின்றி ஐந்து வருடங்களுக்கு மேல் இருப்பவர்களில் அவர்களின் பிள்ளைகள் யாராவது 3 ஆண்டுகள் பிரான்ஸ் பாடசாலையில் கல்விகற்றால் அக்குடும்பத்திற்கு வதிவிட அனுமதி வழங்கப்படும் என பிரான்ஸ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மனுவல் வால்ஸ் நேற்று வெளியிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். 3 வருடங்கள் பிரான்ஸில் பிள்ளைகள் பாடசாலையில் படிககும் சான்றிதழ்கள் மற்றும் பிரான்ஸில் 5 ஆண்டுகள் வசித்ததறகான சான்றிதழ் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட உள்விவகார அமைச்சின் குடிவரவுப் பிரிவுக்கு அனுப்பிவைக்க முடியும் என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 35 ஆயிரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊக்கமருந்துக்குத் தடை; வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பாவனையை கட்டுப்படுத்தவென புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் ஆலோசனைப்படி சட்டமூலம் ஒன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நாடாளுமன்றில் சமர்பிக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

ஊக்கமருந்துப் பாவனையை கட்டுப்படுத்தும் சர்வதேச கொளகையில் இலங்கை அரசு கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரியில கையொப்பம் இட்டுள்ளது. புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து அழிப்பு நிறுவனம் ஒன்றையும் அரசு அமைக்கவுள்ளது.

## தமிழ் சட்டத்தரணிக்கு கனடாவில் விருது

ரொறன்ரோவின் பிரபல தமிழ் வழக்கறிஞரும் சமூக சேவையாளருமான திருமதி மெலானி டேவிட் கனடா பல்லினப் பத்திரிகையாளர் சங்கத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். ஒன்ராறியோவின் ஆளுநர் டேவிட் ஓன்லியால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மெலானி டேவிட் வழக்கறிஞர் என்பதைவிடவும், வளர்ந்து வரும் ஒரு தொழிலதிபர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த வருட நடுப்பகுதியில் கனடாவில் தலைசிறந்த 25 குடிவரவாளர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட மெலானி டேவிட், தான் இலங்கையில் ஒரு சட்டத்தரணியாக வருவதற்கான படிப்புக்களைத் தொடர்ந்து கொண்டிருந்த போது இறுதிப் பரீட்சை நெருங்கிய போது தங்களது கேள்வித்தாள்கள் எரிக்கபபட்டு இறுதிப் பரீட்சையில் தோற்ற முடியவில்லை என்ற வேதனை தனக்கிருந்தாலும், கனடாவில் தான் அதனைச் சாதித்ததாகவும், முயற்சியுடையவர்களிற்கு

19 ஆம் பக்கம் பார்க்க




மெய்ப்பொருள் - சமத்துவம் - சகோதரத்துவம்

# கிளிநொச்சியில் நடமாடும் சேவை
# மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு

(கிளிநொச்சி)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமும் தலைமைக் காரியாலயமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 5, 6, 7 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முறையே பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை பிரதேச செயலகங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது தனது சேவையை கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஸ்தரித்திருந்தது.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் அமைந்துள்ள நடமாடும் அலுவலகத்தினூடாக இச்சேவை மேற்கொள்ளப்படுகிறது.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் தூர இடங்களிலுள்ள மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களது பிரதேச செயலகங்களுக்கு வருகைதந்து அவர்களது முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், முறைப்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தத் தீர்மானித்துள்ளது.

குறித்த நடமாடும் சேவை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை பின்வரும் இடங்களில் இடம்பெறும்.

5.12.2012 புதன்கிழமை - பூநகரி பிரதேச செயலகம்.

6.12.2012 - வியாழக்கிழமை - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்.

7.12.2012 வெள்ளிக்கிழமை - கண்டாவளை பிரதேச செயலகம.

எனவே இந்நடமாடும் சேவையின் மூலம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் சேவையைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.



அண்மையில் நடைபெற்ற சமுர்த்தி செக்குலு சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார இலக்கியப் போட்டியில் எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற தேசியமட்டப் போட்டியில் காரைநகர் யாழ்ரன் கல்லூரி குழுநடனப் போட்டியில் 3 ஆம் இடத்தைத் தட்டிக்கொண்டது. (50)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி ஆசிரியர் கலாசாலை ஒளிவிழா நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் இக்னேசியஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறள்ளது.

புனித பிரான்சிஸ் சேவியர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

விருந்தினராக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாசன் கலந்துகொள்கிறார்.

# யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மாற்றுவலுவுள்ளோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின விழா எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி பி.அருணா, ஊர்காவற்றுறை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் (தலைமைப் பீடம்) எம்.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பயனாளிகளுக்கு நடமாடும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

# வர்த்தக பாடத்தில் சுகாதாரக் கேள்வி
## - மாணவர்கள் குழப்பம் -

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட ஆண்டிறுதிப் பரீட்சையில் தரம் - 10 வர்த்தக பாடத்திற்குரிய வினாக்களுக்குப் பதிலாக வேறுபட்ட வினாக்கள் அச்சிடப்பட்டிருந்ததால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நேற்று நடைபெற்ற வர்த்தக பாட வினாப்பத்திரத்தில் சுகாதார பாடத்திற்குரிய 5 வினாக்கள் அச்சிடப்பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் பெரும் குழப்பமடைந்தனர்.

இது தொடர்பாக மாணவர்கள் மேற்பார்வை ஆசிரியர்களுக்கு முறையிட்டதையடுத்து ஆசிரியர்கள் மாற்று ஒழுங்குகளை செய்து பரீட்சையை நடத்தி முடித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (93)

# வடக்கின் வசந்தம் வட்டக்கச்சிக்கு எப்போது?

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்கு வடக்கின் வசந்தம் மூலம் மின்சாரம் கிடைக்குமா என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வட்டக்கச்சி பகுதிக்கு மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு வயர் இழுக்கப்பட்டு மின்சார இணைப்புக்கள் இணைக்கப்பட்டு 6 மாதத்திற்கு மேலாகியும் இதுவரை மக்களுக்கான இலவச மின்னிணைப்பு வழங்கப்படவில்லை. ஆனால் பணம் செலுத்தியோருக்கு மட்டும் உடனுக்குடன் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் வறிய குடும்பங்கள் மின் இணைப்புக்கள் பெறமுடியாது உள்ளன. அத்துடன் மாயவனூர் பகுதிக்கான மின் இணைப்புக்கான வயரோ இதுவரை இணைக்கப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் தமக்கு மின்சாரம் கிடைக்காதோ என கவலை கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து வட்டக்கச்சி பகுதிக்கான வடக்கின் வசந்தம் மூலம் கிடைக்க வேண்டிய மின்சாரத்தை விரைவாக வழங்க ஆவன செய்துதருமாறும் மின்னிணைப்பு மேற்கொள்ளப்படாத பகுதிகளுக்கு மின் இணைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறும் அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளை வேண்டி நிற்கின்றனர். (45)

# பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தல் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9.00 மணிக்கு நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சரசாலை பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திரு.திருமதி சி.துரைராசா தம்பதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் ரி.தர்சினி, சபை உறுப்பினர்களான ச.ஞானலிங்கம், வே.கந்தையா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீஸ்வரன், பாடசாலை அதிபர்களான வே.கந்தசாமி, செ.ஜெயக்குமார், திருமதி ஜெ.தேவேஸ்வரன், திருமதி ச.தர்மகுலசிங்கம், நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை உறுப்பினர் செல்வி செ.நாகமுத்து ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும், தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நூலக அங்கத்தவர்களை மேம்படுத்தும் முகமாக இலவச அங்கத்துவமும் வழங்கப்படும். (11)

# தர்மகேணியில் சிறுவர் பூங்கா


(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேசத்திலுள்ள தர்மகேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கொய்கா நிறுவனத்தினரின் நிதிப் பங்களிப்பில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் வகுப்பறைக் கட்டடம், சிறுவர் பூங்கா, தண்ணீர் தாங்கி என்பன புதிதாக அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நேற்று நடைபெற்றதுடன் மேற்படி நிறுவன பிரதிநிதி யவ்மூ இலங்கைக்கான சைமன் பதில் அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன், பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், தர்மகேணி பிரதேச இராணுவ அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறுவர் நேயப் பாடசாலையாக இருக்கும் இப்பாடசாலையை பிள்ளைநேயப் பாடசாலையாகத் தரமுயர்த்தும் நோக்குடனேயே இப்புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்க்ப்படுகிறது.

25 இலட்சம் ரூபா செலவில் இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)





காரைநகர் ஈழத்துச் சிதம்பர சிவன் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை கார்த்திகை திருவிழாவும் சொக்கப்பானை எரித்தலும் இடம்பெற்றது. சிவனும் உமையும் சமேதரராக எழுந்தருளி வந்து ஆலயத்தின் முன்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த சிவன் ஐயனார் வாசலில் சொக்கப்பானைகள் எரியச்செய்து தமது அக்கினி வடிவான சோதிவடிவத்தை பக்தர்களுக்கு காட்சி கொடுப்பதைக் காணலாம். (50)

## செலான் வங்கி 3 ஆவது அகவை

(யாழ்ப்பாணம்)

செலான் வங்கி நெல்லியடி கிளை தனது 3 வருட பூர்த்தி விழாவை இன்று கொண்டாடவிருக்கின்றது.

மகிழ்ச்சியான இந்நாளில் வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறபபிக்குமாறு அவ்வங்கியின் முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.


## சேவை நலன் பாராட்டு



27.11.2012 யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையில் 35 வருட சேவையை வழங்கி 27.11.2012 இல் ஓய்வு பெற்ற மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம்.

(R/087)

# வாழ்வாதார உதவிகளின்றி வாழும் திருமுறிகண்டி கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறி வசித்து வரும் மக்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளின்றி வாழ்வாதர ரீதியாக கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவில் 338 குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் 67 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும், மிகுதி குடும்பங்களில் 75 பேருக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும், ஏனையவர்களுக்கு இதுவரை எவ்வித வீட்டுத்திட்ட வசதிகளும் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

வீட்டு வசதி இல்லாத மக்கள மழை காலங்களில் பாடசாலைகளிலும், முன்பள்ளி மற்றும் பொது மண்டபங்களிலும் தங்கியிருப்பதாகவும், தெரிவிக்கும் இவர்கள் தமக்கு உதவிகள் எதுவும் பெற்றுத்தரப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யு.என்.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் 167 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் 37 பேருக்கு எந்த உதவியும் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டுகின்றனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 67 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருவதாகவும், இவர்களுக்கு சுய தொழிலை மேற்கொள்வதற்குரிய எவ்வித உதவிகளும வழங்கப்படவில்லை எனவும் வழங்கப்படுமிடத்து தாம் நாளாந்தம் ஜீவனோபாயத்தை சிரமமின்றி முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் கிராமத்தில் 9 வீதிகள் உள்ள நிலையில் இதுவரை எவ்வீதியும் புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 60 குடும்பங்கள் பிரயாணங்களை மேற்கொள்வதற்கு ஒரு துவிச்சக்கர வண்டி கூட இல்லாது கால் நடையாகச் செல்கின்ற நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் அடிப்படை வாழ்வாதார தேவைகளை நிறைவேற்ற அரச, அரச சார்பறற்ற நிறுவனங்கள் தமக்கு உதவ வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# முல்லை கல்வி வலயத்தால் மாணவர் கௌரவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், இந்த வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் மா.இராசகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் கல்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் வெலிஓயாவைச் சேர்ந்த 3 சிங்கள மாணவர்கள் உள்ளடங்கலாக 82 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (04)

# அபிவிருத்திச்சபையால் நாட்காட்டி வெளியீடு

(யாழ்.நிருபர்)

சுவிஸ் - காரை அபிவிருத்திச்சபையினரால் 2013 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி வெளியிடப்படவுள்ளது.

இந் நாட்காட்டி வெளியீட்டு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ZURICH இல் நடைபெறவுள்ளது.

சுவிஸ் - காரைநகர் அபிவிருத்திச் சங்கத்தலைவர் பூ.விவேகானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரை, வாழ்த்துரை, சிறப்புரைகள் என்பனவும் நாட்காட்டி வெளியீடும் இடம்பெறும்.

காரைநகரின் பசுமையான நினைவுகளை உள்ளடக்கியதாக 13 பக்கங்களில் அழகிய மூவர்ண தாள்களில் இந்த நாட்காட்டி வெளியிடப்படவுள்ளது. (10)

# தையல் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கல்

(தும்பளை)

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தையல் பயிற்சி நிறைவுநாள் நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், அண்மையில் இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வே.தவச்செல்வன் தலமையில் கற்கோவளம் லீட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக பங்குத்தந்தை ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். தொடர்ந்து தையல் பயிற்சி மாணவர்களின் கலைநிகழ்வுகளும், பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# யாழ்ரன் கல்லூரி முதலாமிடம்

(யாழ்.நிருபர்)

2012 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான பாட ஆய்வு கூடப் போட்டியில் காரைநகர் யாழ்ரன் கல்லூரி கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தீவக வலய மட்டத்தில் சிறப்புத் தகைமைச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டது.

இதற்கான பரிசில்களும், சான்றிதழ்களும் தீவக வலயத்தினரால் நடத்தப்பட்ட விஞ்ஞான தின வைபவத்தில் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி மற்றும் விஞ்ஞான பாடபொறுப்பாசிரியை செல்வி தா.கனகசபை ஆகியோரிடம் வழங்கப்பட்டன. (10)

# பல்கலை பெண்கள் விடுதியில் இருவருக்கு டெங்கு தொற்று

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழகப் பெண்கள் விடுதியில் இரண்டு பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி விடுதியிலிருந்து வெளியேறும் தண்ணீர் வழிந்தோட முடியாத நிலையில் அங்குள்ள கிடங்குகள், பள்ளங்களில் தேங்கி நிற்பதால் அதிகளவிலான குடம்பிகள் தண்ணீரில் உற்பத்தியாகிக் காணப்படுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இக்குடம்பிகளினால் அயலில் உள்ள கிராமங்களில் உள்ள மக்களுக்கும் டெங்கு நோய் பரவும் ஆபத்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதியின் பக்கமாகத் தண்ணீர் தேங்கி நிற்பதாகப் பல தடவைகள் பல்கலைக்கழக உபவேந்தருக்கும், பதிவாளருக்கும் முறையிட்டதாகவும், ஆனால் எவ்வித முன்னேற்ற கரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

தேங்கி நிற்கும் தண்ணீர் வழிந்தோட வழிவகைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து டெங்கு நோயின் தாக்கம் இப்பகுதியில் அதிகமாகக் காணப்படும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (137)

# சமுர்த்தி அதிகாரசபையின் இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்கான தேசிய மாவட்ட சிறுவர் கலை இலக்கியப் போட்டியில் (தமிழ் மொழி மூலமான) முதல் 5 இடங்களைப் பெற்ற யாழ். மாவட்ட போட்டியாளர்களின் விபரம் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கீழ்ப்பிரிவில் நடத்தப்பட்ட பாடல் போட்டியில் ஜே.ரீதிகா, (முதலாமிடம், கோப்பாய்), அறிவிப்பாளர் போட்டியில் ஆர்.தமிழ்சுடர் (முதலாமிடம், காரைநகர்), மத்திய பிரிவில் பேச்சு ஆர். சோபிதா (இரண்டாம் இடம் சண்டிலிப்பாய்), நாட்டார் பாடல் போட்டியில் எஸ்.ஜீவதாஸ் (மூன்றாமிடம் காரைநகர்), கிராமிய நடனம் குழு யாழ்ற்றன் சிறுவர் கழகம் (மூன்றாமிடம், காரைநகர்).

அறிவிப்பாளர் போட்டியில் எம்.நாகசதுர்சன் (நான்காமிடம், மருதங்கேணி), தனிநபர் பாடல் ரி.சுஜித் (நான்காமிடம், மருதங்கேணி) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

மேலும் மேற்பிரிவில் பேச்சு என்.சிந்துஜா (முதலாமிடம் நல்லூர்) தனிநபர் பாடல் போட்டியில் என்.சிந்துஜா (ஐந்தாமிடம் நல்லூர்), ஓவியம் ஜே.பகீரதன் (முதலாமிடம், பருத்தித்துறை) நாட்டார் பாடல் எஸ்.அபிராமி (இரண்டாமிடம், சங்கானை) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

திறந்த பிரிவில் நாடகப் போட்டியில் சுழிபுரம் மேற்கு சிறுவர் கழகம் இரண்டாமிடம் சங்கானை) வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான தேசிய விருது வழங்கல் வைபவம் கம்பஹா ஸ்ரீ சந்திரஜோதி மகா வித்தியாலயத்தில் நாளை சனிக் கிழமை நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் வகையில் வெற்றியாளர்கள் மாவட்ட செயலக சமுர்த்தி அலுவலகத்தின் ஏற்பாட்டில் அழைத்துச் செல்லப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்காக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய கிளையினால் நெல்லியடி, சாவகச்சேரி, புத்தூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடந்த 19, 20, 21 ஆம் திகதிகளில் நடாத்திய இலவச கல்விக் கருத்தரங்கின் சில பதிவுகள்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வரலாறு சுழன்று மீண்டும் வருகிறதா?

பத்திரிகைச் செய்திகள், படங்களைப் பார்க்கும்போது மனதில் திகில் பரவுகிறது. பழையபடி மீண்டும் மாணவர்கள் தூண்டப்படுகிறார்களா? கடந்த மூன்று தசாப்தமாகப் பட்ட அவலங்களுக்கெல்லாம் அந்தத் தொடக்க நாட்களில் மாணவர்களுக்கு ஏற்றிவிடப்பட்ட உசுப்பல்கள் போலவே ஊடகங்களும் அரசியல்வாதிகளும் நடந்துகொள்ளும் முறை இப்போதும் அச்சப்பட வைக்கிறது.

நாடாளுமன்றில் வரவு – செலவுத்திட்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கிருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் ஏன் யாழ்ப்பாணத்தில் நின்றார்? பல்கலைக் கழகத்துக்குச் சென்று ஏன் கார்க் கண்ணாடியை உடைத்துக் கொள்கிறார்? பரபரப்புச் செய்திகளுக்காகக் காய்ந்து கிடந்தது போல் அவரது பத்திரிகை ஏன் பக்கம் பக்கமாகக் கலவரச் செய்தி வெளியிட்டு மக்களைக் களேபரப்படுத்துவதில் களிப்பெய்துகிறது?

எல்லாம் வாக்குகளைக் குறிவைத்து நடப்பதாகவே புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மாணவர்களின் படிப்புப் பாழாவது பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. பதற்ற நிலைமையே முக்கியம். ஏற்கனவே பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்தால் படிப்பை இழந்திருந்த மாணவர்களிடம் மீண்டும் படிப்பைக் குழப்பும் கலவரச் சூழலை உருவாக்குவதில் இலாபமடைகிறவர்கள் யார்? மறுபுறம் நஷ்டமடையப் போகிறவர்கள் யார்?

அமைதியாக அவரவர் வீடுகளில் முப்பது வருடகால யுத்தம் தின்ற பிள்ளைகளை, சகோதரர்களை, தந்தைமாரை, கணவன்மாரை நினைந்துருகி அகவணக்கம் செய்யவேண்டிய தினம் தெருவுக்கு வந்தது ஏன்? வன்னியில் மக்கள் செத்துவிழுந்து கொண்டிருந்தபோது பாதுகாப்பாய் நாட்டைவிட்டு ஓடிப்போய், மக்கள் கந்தறுந்து முடிந்த பிறகு திரும்பிவந்த முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பல்கலைக் கழகத்தை ரணகளமாக்கப் போயிருப்பது ஏன்?

மாணவர்களை இவர்கள் படிக்க விடப்போவதில்லையா? மீண்டும் அதே பழைய பாணியில் யுத்தத்திற்கு இட்டுச்செல்லும் அடுக்குகளை எடுப்பதற்கு ஏன் முந்தி நிற்கிறார்கள்? சட்டென்று உணர்ச்சிவசப்படும் பருவத்திலுள்ள மாணவர்களிடம் போய் இவர்கள் செய்துகொண்டிருப்பதென்ன? அவர்கள் படிப்புக் கெட்டு, வாழ்வு கெட்டு அலைவதில்தான் இவர்களது வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொள்ள வேண்டுமா?

கடந்த மாதம் நல்லூர் பிரதேசசபை தவிசாளர் தாக்கப்பட்டபோது இதே நாடாளுமன்ற உறுப்பினர்தான் போராட்டம் வெடிக்கும் என்று அறிக்கை விட்டிருந்தார். இவர்கள் வெடிக்கப்பண்ணும் போராட்டத்தால் நேரும் கதி மக்களுக்குத்தானே தெரியும்! இவர்களோ போராட்டத்தை வெடிக்கப் பண்ணிவிட்டு, தாங்கள் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு ஓடிவிடுவார்கள்.

அதனால், இவர்கள் அங்கங்கே ஏற்பாடு செய்த 'போராட்ட வெடிப்பு' ஆர்ப்பாட்டங்கள் எதிலும் மக்கள் கலந்துகொள்ளவில்லை. சக நாடாளுமன்ற உறுப்பினர்களில் கூட எல்லோரும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு வருவதில்லை. யாழ்ப்பாணத்தில் பத்திரிகையை நடத்தும் இந்த எம்.பி.யும் ஓரிரு ஜூனியர் எம்.பி.க்களும் அவர்களது மெய்ப்பாதுகாலர்களுமே இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வார்கள். மறுநாள் பத்திரிகையில் சொல்லி வைத்ததுபோல் 'மாபெரும் ஆர்ப்பாட்டம் – யாழ்நகர் குலுங்கியது' என்று செய்தி வருவதோடு சரி.

இந்த வெப்பியாரத்தில் இருந்தவர்களுக்குத்தான் வாகாக மாணவர்கள் கிடைத்தார்கள். பாய்ந்துசென்று அவர்களது படிப்பைக் குழப்பிவிட்டு வந்திருக்கிறார்கள். போராட்ட வெடிப்புக்கு மாணவர்களைத் தூண்டிவிட்டு, பழையபடி அந்த நெருப்பில் பத்திரிகைக்குப் பரபரப்பும் வாக்குச் சேகரிப்புமாகக் குளிர்காய நினைக்கிறார்கள்.

இவர்களைவிடப் புத்திசாலிகளான மாணவ சமுதாயம்தான் நமது மக்களின் வாழ்வு குறித்த கவனத்துடனும் விழிப்புடனும் நடந்துகொள்ள வேண்டும். - ஆசிரியர்

# இந்திய மீனவரின் அத்துமீறலைத் தடுத்து கடல்வளத்தை பாதுகாக்க உதவுங்கள்

## கடற்றொழில் சமாசம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினையும், எமதுபகுதி கடல் வளங்களையும் பாதுகாக்க வேண்டிய தார்மீகப்பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே அத்துமீறும், இந்திய மீனவரின் செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் மருதடிலேன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவருக்கு அளித்த மகஜரில் தெரிவித்துள்ளது. அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதுவரைகாலமும் வடபகுதி கடற்றொழிலாளர்கள் அனுபவித்துவந்த துன்பங்களுக்கு அளவேயில்லை. இம் மீனவர்கள் கடற்றொழில் செய்யும் வேளைகளில் பற்பல துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றமை சகலரும் அறிந்த விடயம். குறிப்பாக, இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லையினைத் தாண்டிவந்து, எமது கடல் பகுதியில் தடைசெய்யப்பட்ட இழுவைப்படகுகள் மூலமும் தங்குதடையின்றி பெரும் எண்ணிக்கையில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருவதன் காரணமாக எமது பகுதி மீனவர்களது பெறுமதிமிக்க வலைகளும், கடல் உயிரினங்களும், வளங்களும் அழிக்கப்படுகின்றது. இவை நாளாந்த நிகழ்வுகளாக நடைபெற்று வருவதனால் எமது பகுதி கடற்றொழிலாளர்கள் வாழ்வியல் துன்பங்களை தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் வங்கிகளில் பெறப்பட்ட வங்கிக் கடன்களையும் அதற்கான வட்டியினையும் மீளச்செலுத்த முடியாத நிலையில், வறுமை நிலைக்குட்பட்டு விரக்தியுற்ற முறுகல் நிலைதோற்றுவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனை தவிர்ப்பது அனைவருடைய பொறுப்புமாகும். என்பதனை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானதும், அவசர தேவையாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாங்கள் இதுவரை காலமும் பல தடவை பலதரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தும் பலசுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்திய போதிலும் கூட இவ்விசைப்படகுகள் எமது கடற்பகுதியில் வருகை தருவதனை நிறுத்துவதாக இல்லை. இதனால் விரக்தியுற்ற எமது பகுதி மீனவர்கள் கடற்பகுதியில் கைகலப்பில் ஈடுபட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு இருந்தபோதிலும் கூட ஈனஇரக்கமின்றி இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற நிகழ்வாக வேதனை தரும் செயலாக அமைந்து வருவதனை இன்னும் நீங்கள் உணரவில்லையா? இனிமேலும் இதனை உடன் தடுத்து நிறுத்தாது விடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போகலாம் என்பதனை தங்களுக்கு மிகுந்த மன வேதனையுடன் அறியத்தருகின்றோம்.

எனவே இதனைத் தடுத்து நிறுத்தி வடபகுதி மீனவர்களுக்கு மீண்டும் துன்பியல் நிகழ்வுகளை ஏற்படுத்தாது இந்திய - இலங்கை நாடுகளின் நல்லுறவுகள் பாதிப்படையாமல் பார்த்துக்கொள்ள உடன் தீர்வொன்றை ஏற்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எம்மால் வழங்கப்பட்ட கால அவகாசம் இன்னும் உங்களுக்குப் போதவில்லையா?

கடற்றொழிலாளர்களை ஒன்றிணைத்து குறிப்பாக யாழ்மாவடடத்திலுள்ள 118 கடற்றொழிலாளர் கிராமமட்ட சங்கங்களும், பிரதேசமட்டத்திலுள்ள 11 கடற்றொழிலாளர் சமாசங்களும், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைமையில் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டாக மாபெரும் பேரணியாக வந்து தங்கள் முன் சமர்ப்பித்துள்ள இவ்வேண்டுகோளை தங்களின் உடனடி கவனத்திற்கு உட்படுத்தி உரிய நடவடிக்கையினை விரைவாக மேற்கொண்டு ஆவண செய்யுமாறு இவ்மகஜரின் மூலம் தங்களை பணிவன்புடனும், வினயமாகவும் கேட்டுக் கொள்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடைசெய்த மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தினால் கடும் தண்டனை

## கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் தண்டனை விதிக்கும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவோரின் படகுகளை நடைமுறைச் சட்டத்தின் கீழ் அரசுடைமையாக்க முடியாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்க வேண்டாம் என கடற்றொழில் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய, அவர்களுக்கான எரிபொருள் மானியத்தையும் இரத்துச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அதிகளவில் டைனமைட் பயன்படுத்தப்படுகின்றமை தெரியவந்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குற்றத்திற்காக கைது செய்யப்படுவோருக்கு தற்போது சுமார் 2000 ரூபா மாத்திரமே அபராதமாக விதிக்கப்படுவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

கடுமையான தண்டனைகள் விதிக்கப்படாததால் மீனவர்கள் மீண்டும் மீண்டும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்த முனைவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவோரின் படகுகளை அரசுடைமையாக்குவதற்கு உத்தேசித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 158 இலங்கைத் தொழிலாளர் வெளிநாடுகளில் உயிரிழப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்களில் 158 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 120 பேர் இயற்கைக் காரணங்களினால் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையிலேயே 158 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் இரண்டு தற்கொலைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. வீதி விபத்துக்களினால் 16 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதேவேளை, தங்களது வேலைத்தலங்களில் தொழிற்துறை ஆபத்துக்களினால் 20 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதில் பெண்களுக்கு உள்ள ஆர்வத்தை குறைப்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். இதற்கு பதிலாக, பயிற்சி பெற்ற தொழிலாளர்களை நாம் அனுப்ப வேண்டும். வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புத் தேடி செல்லும் பெண்களின் வயதெல்லையை 20 ஆக அதிகரித்துள்ளோம்.

இன்னும் சில வருடங்களில் இந்த வயதெல்லையை மேலும் அதிகரிக்க நாம் எண்ணுகின்றோம் என்றார்.

# எல்.ரி.ரி.ஈ. பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தப் போகிறது என்பதை ஐ.நா. 2008ஆம் ஆண்டே அறிந்திருந்தது

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஐ.நா.வின் செயற்பாடுகளைப் பற்றிய உள்ளக ஆய்வுக் குழுவினரின் அறிக்கை பான் கீ மூன் அவர்களால் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. தோல்வி அடையப் போகிறது என்பதை ஜனவரி மாத இறுதியிலேயே ஐ.நா. உணர்ந்திருந்தது என்று அது தெரிவிக்கிறது. மற்றும் அது ஒரு சரியான வேலையை செய்திருந்தது. சரணடைவதை பற்றிய ஒரு திட்டத்தை அது வகுத்திருந்தது.

இது அநேக உயிர்களை காப்பாற்றியிருக்கும்.

இந்த சரணடையும் திட்டம் பெப்ரவரி ஆரம்பத்தில் எல்.ரி.ரி.ஈ. முன் கொண்டுவரப் பட்டது, ஆனால் அது நிரா கரிக்கப்பட்டது. அப்போது எல்.ரி.ரி.ஈ. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரண்டிலும் தோல்வியடைந்திருந்தது. ஆனால் பிரபாகரன் தளர்வு காட்ட மறுத்துவிட்டார். பின்னர் ஆனந்தபுரம் சமரில் தனது மூத்த தளபதிகள் பலரையும் இழந்தபோதும்கூட, மீண்டும் ஏப்ரல் மாதம் அவர் சரணடையும் திட்டத்தை நிராகரித்தார். தாக்குதலற்ற வலயத்துக்குள் அவர் அகப்பட்டிருந்தார் ஆனாலும் இன்னமும் தவிர்க்க முடியாத சூழ்நிலையை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்கவில்லை.

சிலபேர் சந்தேகமின்றி அது தான் உயர்ந்த வீரத்தின் பண்பு என்று கருதலாம். ஆனால் மோதல் வரலாற்றில் அதுதான் மிகப்பெரிய குற்றம்.

ஒரு மாபெரும் படுகொலை களின் நிகழ்வு இடம்பெறு வதையே பிரபாகரன் விரும்பினார்.

அவரின் மூலோபாயத் தந்திரம் ஒரு அசாதாரணமான மனிதாபிமான பேரழிவை உருவாக்குவதே. அப்போது தான் சர்வதேச சமூகம் கட்டாயமாக தலையிட வேண்டும் என்பதை உணரும். நீண்டநாட்களுக்கு முன்னரே, தன்னால் இலங்கைப் படைகளுக்கு எதிராக தாக்குப்பிடிக்க முடியாது என்பதை ஐ.நா. உணர்ந்துவிட்டது என்று அவர் அறிந்திருந்தார். அது ஒரு யுத்தம் என்று வந்தபிறகு எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளாமலிருக்க அவர் ஒன்றும் முட்டாளல்ல. அதே போல யுத்தத்தில் இறங்கிய பிறகு சர்வதேச அரசியல் நிலவரங்கள் தெரியாத அளவுக்கு மதிநுட்பமற்ற ஒருவரல்ல பிரபாகரன்.

அப்போது மேற்கு, மனிதாபிமான யுத்தங்களுக்கான ஒரு பாணியைஉருவாக்கியிருந்தது. 1999இல் மிலோசேவிக்கை, கொசோவாவிலிருந்து பின்வாங்கச் செய்வதற்காக அது சேர்பியாமீது வேண்டியளவு குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தது. பிறகு 2001இல் ஆப்கானிஸ்தானில் தலிபானை துடைத்தழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது, மற்றும் 2003இல் அது ஈராக்மீது படையெடுப்பு நடத்தி சதாம் ஹுசேனின் ஆட்சிக்கு முடிவு கட்டியது. ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் செப்ரெம்பர் 11இன் பின்னான பயங்கரவாதத்தின் மீதான யுத்தத்தின் ஒரு பகுதியாகும். ஆனால் இது மேற்கத்தைய பொதுமக்களுக்கு பின்வருமாறு விளக்கப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், உலகின் ஏனைய பகுதியினருக்கு ஆபத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி தனது சொந்த மக்களுக்கு எதிராகவும் அடக்குமுறையை ஏற்படுத்துகின்றன என்று. பிரபாகரன் தாக்குதலற்ற வலயத்துக்குள் ஊடுருவியிருந்த வேளையிலும் அந்த யுத்தங்கள் அப்போதும் நடந்துகொண்டுதான் இருந்தன.

மேற்கத்தைய அரசியல்வாதிகள் தலையீடு செய்வதற்கு வேறு பல நோக்கங்கள் இருந்தன, ஆனால் ருவாண்டாவைப் போல மற்றொரு நிலை உருவாகாமல் உலகத்தைக் காப்பாற்றுவதற்காகவே தாங்கள் போராடுவதாக அவர்கள் எப்போதும் சொல்லிக் கொண்டார்கள். இதனால்தான் மேற்கத்தைய படைகளை இலங்கைக்கு வரவழைக்கலாம் என்று பிரபாகரன் நினைத்தார்.

இதற்காக யாரோ எங்கேயோ நிச்சயமாக பழிச்சொல் கேட்பதற்கு உரியவராக இருப்பார்கள்.

ஐ.நா. தவறான கருத்துள்ள பங்களிப்பை ஆற்றியுள்ளது. ஆனால் இதற்காக உண்மையில் குற்றவாளியாக வேண்டியவர்கள் நிச்சயமாக இந்த மனிதாபிமானப் போர்களை ஆரம்பித்து வைத்த மேற்கத்தையவர்கள்தான். ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் ஏன் கொசோவாவில் கூட மனிதாபிமானப் போர்கள் அதிக மக்களை காப்பாற்றுவதைக் காட்டிலும் அதிகம் பேர்களை கொன்றிருக்கிறது. மேற்கத்தைய படைகள் இலங்கையில் கால்வைத்திருந்தால்கூட விளைவு சரியாக இதே போலத்தான் இருந்திருக்கும்.

மேற்கானது அடிக்கடி ருவாண்டாவின் ஞாபகத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் இருந்திருந்தால், பிரபாகரன் வேறு வித்தியாசமான ஒரு தந்திரத்தைத் தெரிவு செய்திருப்பார். ஒரு பிரதேசத்தை பிடித்து வைத்திருக்கும் திட்டத்தை அவர் கைவிட்டிருப்பார்.

சிறிய நிலப்பகுதிக்குள் பின்வாங்கிச் செல்லும்போதெல்லாம், 300,000 மேற்பட்ட பொதுமக்களை துப்பாக்கி முனையில் தன்னுடன் இழுத்துச் சென்று, கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அவர்களை படையில் கட்டாயமாக இணைத்து, சாவதற்காக அவர்களை யுத்த முனைக்கு அனுப்பிவைக்கும் அதே வேளை, எஞ்சியவர்களை பதுங்கு குழிக்குள் மிகவும் சிறிதளவு உணவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் என்பனவற்றுடன் பதுங்கி இருக்கும்படி கட்டாயப்படுத்தி, மற்றும் அவர்களுக்கு மத்தியில் இருந்து அவரது அங்கத்தவர்கள் இலங்கைப் படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்போது அந்த அப்பாவி மக்களின் தலைக்கு மேல் பேரழிவை தரும் குண்டுமாரியை கொட்ட வைத்ததுக்குப் பதிலாக அவர் காடுகளுக்கு திரும்பிச் சென்று கெரில்லா யுத்தத்தை ஆரம்பித்திருப்பார். (எதிர்கால சந்ததியினரை அணி திரட்டி கொலைக்கு கொடுக்கும் அடிப் படையினைப் போல இல்லாமல், அவரால் இதேபோல செய்திருக்க முடியும். அவரைத்தவிர எஞ்சியிருக்கும் அனைவரும் மனித உயிருக்கு மதிப்புகொடுப்பதைப் போல அல்லாது, அவர் மனித உயிர்களுக்கு அதிகம் அக்கறை கொடுப்பவரல்ல). ஐ.நா.வின் உள்ளக ஆய்வுக்குழுவின் அறிக்கை, அப்போது இலங்கையில் ஐ.நா.வின் வதிவிட ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியவர், இலங்கை அரசாங்கத்துடன் கையாளவேண்டிய அரசியற் புரிந்துணர்வுத்தன்மை குறைவாக கொண்டிருந்தார் என்று அவர்மீது கண்டனம் தெரிவித்துள்ளது. ஆனால் அது ஏற்றுக்கொள்ளத்தவறியதும் இன்னும் விடை தராத கேள்வியாகவும் உள்ளது, பிரபாகரனை எப்படி கையாண்டிருக்க வேண்டும் என்பது தான். இன்னமும் அது ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகவே உள்ளது.

எல்.ரி.ரி.ஈ. பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப் போகிறது என்பது ஐ.நா.வுக்கு 2008ஆம் ஆண்டே தெரியும். எல்.ரி.ரி.ஈ. தனது செயற்பாடுகளின் பாதுகாப்புக்காகவும் மற்றும் உடன்படிக்கைகளுக்கு மாறாக அதனை மீறி, தனது வசதிகளை ஐ.நா. அலுவலகத்துக்கு அருகில் நிலை நிறுத்திக் கொள்வதற்கும், கிளிநொச்சியில் ஐ.நா.வின் பிரசன்னத்தை தொடர்ந்தும் பயன்படுத்த முயற்சித்தது என்பதை அந்த அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. ஐ.நா. வன்னிப் பிரதேசத்தைவிட்டு உத்தியோகபூர்வமாக விலகிய போது, அதன் உள்நாட்டு அலுவலர்கள் 17 பேரை அங்கேயே விட்டுவிட்டு வரவேண்டியிருந்தது. ஏனெனில் அவர்களில் தங்கியிருப்பவர்களான 86 பேர்களை எல்.ரி.ரி.ஈ. பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது என்பதனையும் அந்த அறிக்கை ஏற்றுக் கொண்டுள்ளது. 2008இல் இலங்கைப் படைகள் முகம் கொடுத்துள்ள அசாத்திய நிலைபற்றி ஐ.நா. அறிந்திருந்தது.

அப்படியானால் 2009இல் அதைவிட சிறப்பாக அதனால் என்ன செய்திருக்க முடியும்?

டேவிட் மிலிபாண்ட் மற்றும் இலங்கையில் தங்களது மூக்கை நுழைத்திருந்த இதர மேற்கத்தைய அரசியல்வாதிகள் ஆகியோரிடம்,அவர்களுடைய பொறுப்புள்ள நடவடிக்கை,சரணடைவதைத் தவிர வேறு தெரிவு இல்லை என்று பிரபாகர னிடம் சொல்லியிருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பது எப்படி?

இல்லை, அப்படியான ஒரு சாத்தியக்கூறு பற்றி அதில் குறிப்பிடப் படக்கூட இல்லை.

ஆறுமாத வேலைகளுக்குப் பிறகு, ஐ.நா. நிபுணர்கள் கொண்டுவர முடிவு செய்திருக்கும் உயர்ந்த திட்டம், அந்தச்சமயத்தில் சர்வதேச சமூகம் செய்த அதே தவறைத்தான் திரும்பவும் செய்கிறது. அது எல்.ரி.ரி.ஈ.யை அலட்சியம் செய்கிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

**இந்த சரணடையும் திட்டம் பெப்ரவரி ஆரம்பத்தில் எல்.ரி.ரி.ஈ.முன்கொண்டு வரப்பட்டது, ஆனால் அது நிராகரிக் கப்பட்டது. அப்போது எல்.ரி.ரி.ஈ கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரண்டிலும் தோல்வியடைந் திருந்தது, ஆனால் பிரபாகரன் தளர்வு காட்ட மறுத்து விட்டார். பின்னர் ஆனந்தபுரம் சமரில் தனது மூத்த தளபதிகள் பலரையும் இழந்த போதும்கூட, மீண்டும் ஏப்ரல் மாதம் அவர் சரணடையும் திட்டத்தை நிரா கரித்தார். தாக்குதலற்ற வலயத்துக்குள் அவர் அகப்பட்டிருந்தார் ஆனாலும் இன்னமும் தவிர்க்க முடியாத சூழ்நிலையை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்கவில்லை. சிலபேர் சந்தேகமின்றி அதுதான் உயர்ந்த வீரத்தின் பண்பு என்று கருதலாம். ஆனால் மோதல் வரலாற்றில் அது தான் மிகப்பெரிய குற்றம்.**





காத் நோபிள் கட்டுரையிலிருந்து

# தெரிவுக்குழுவில் இணையுமாறு தமிழ்க்கட்சிகளுக்கு அழுத்தம்

## புலம்பெயர்ந்தோரிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு செல்லுமாறு தமிழ்க் கட்சிகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை செல்ல வேண்டாம் என பிரசாரம் செய்வதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. இவ்வாறான செயற்பாடுகளினால் பிரிவினைவாதமே தலை தூக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை தடுக்கும் வகையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பிரசாரங்களை மேற்கொண்டால் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா? அரசியல் தீர்வு கிடைக்காது அதற்குப் பதிலாக பிரிவினைவாதமே தலைத்தூக்கும்.

வடமாகாணத்திலேயே கூடுதலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஈராக் மற்றும் சிரியாவில் இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைப் புலம்பெயர்ந்து இலங்கைக்கு எதிராக செயற்படும் தமிழ் மக்கள் புரிந்துக் கொள்ளவேண்டும்.

தமிழ்க் கட்சிகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்லுமாறு வலியுறுத்த வேண்டும் மாறாக இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினால் தீர்வு கிடைக்காது என்றார்.

# அனைத்து வெற்றிகளின் பெருமை படைவீரர்களையே சாரும்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)



நாட்டின் சகல வெற்றிகளினதும் பெருமை படைவீரர்களையே சாரும் என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அத்திடிய பிரதேசத்தில் ஊனமுற்ற படைவீரர்களுக்காக நடை பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமாக சுவாசிக்கக் கூடிய பின்னணியை படைவீரர்களே ஏற்படுத்திக் கொடுத்தனர். பயங்கரவாதம் நிலவிய காலத்தில் முழு நாடுமே எதிர்பார்ப்பின்றிக் காணப்பட்டது.

போரின் போது ஊனமுற்ற படைவீரர்களைப் பாதுகாக்க வேறு நாடுகளில் இவ்வாறான திட்டங்கள் அமுல்படுத்துவதில்லை. உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அல்லாது போரின் போது ஊனமுற்ற படைவீரர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டிருக்காவிட்டால் எல்லைப் பகுதிகளில் மக்களுக்கு இடையில் நாள் தோறும் மோதல் இடம்பெறும் மற்றுமொரு சூடானாக இலங்கை மாற்றமடைந்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார மேம்பாடு மரத்தளபாட உற்பத்தி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மரத் தளபாட உற்பத்தித் தொழிலை மாற்றவேண்டும் என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள உள்ளதுடன் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தளபாட உற்பத்திகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அதிகளவான தொழில் வாய்ப்புக்களை இந்தத் துறையில் ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிரதம நீதியரசருக்கு மரியாதை செலுத்த வேண்டாமென உத்தரவு

## அரசு கூறியதாக சுமந்திரன் எம்.பி.



(கொழும்பு)

தெரிவுக்குழுவின் முன் தோன்றுவதற்காக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்துக்கு வரும் போது அவருக்கு மரியாதை செலுத்த வேண்டாம் என அரசாங்கத்தினால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த கட்டளை மேலிடத்திலிருந்து வந்ததாக சுமந்திரன் கூறினார். இதன்போது உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, சுமந்திரன் கூறியதை மறுக்க முயன்றார். பிரதம நீதியரசருக்கு பொலிஸ் அதிகாரிகள் மரியாதை செலுத்தவில்லை என்பது நிதர்சனமான உண்மை என சுமந்திரன் எம்.பி கூறினார்.

இது உண்மை என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்கா இந்தக் கட்டளையை பிறப்பித்திருந்தார் என அவர் கூறினார். நாடாளுமன்ற[illegible] வரும்போது பிரதம நீதியரசர், சட்டத்தரணிகளுடன் வருவது சட்டப்படி முறையாகுமா என அவைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி. கேட்டார்.

ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி என்றவகையில், உங்களிலிருந்து விளக்கம் பெற விரும்புகின்றேன் என அஸ்வர் எம்.பி கூறினார். இது ஒரு சங்கடமான நிலைமை. இது நாடாளுமன்றத்தில் முன்னொருபோதும் நடந்ததில்லை. உங்களுக்கு சட்ட ஆலோசனை தேவையானால் தயவுசெய்து கட்டணம் செலுததி ஒரு சட்டத்தரணியிடம் ஆலோசனை பெறுங்கள்.

என்னிடமிருந்து இலவச சட்ட ஆலோசனை பெற முயல வேண்டாம் என சுமந்திரன் எம்.பி கூறினார். இங்கு சங்கடம் எதுவுமில்லை. நான் தெளிவுபடுத்தவே இதைக் கேட்டேன். நான், விமர்சிக்கவில்லை. நான் கட்டணம் செலுத்த விரும்பவில்லை என்றார் அஸ்வர் எம.பி. அஸ்வர் எம்.பி.யுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர், தனது பேச்சைத் தொடர்ந்த சுமந்திரன் எம்.பி, நீதித்துறையில் மக்கள் நமபிக்கையை சிதைக்கும் பாதையில் அரசாங்கம் போகின்றது.

அரசாங்கம் நினைத்தபடி நீதித்துறை செயற்படாததால் இவ்வாறான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது என அவர் கூறினார்.

# ரணிலுக்கு எதிராக ஒபாமாவிடம் முறையீடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் முறைப்பாடு செய்யப்படும் என கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்கின்றார். எதிர்வரும் காலங்களில் எதிர்க்கட்சித் தலைவருடனான தொடர்புகளின் போது இந்த விடயத்தை கவனத்திற் கொள்ளுமாறு ஒபாமாவிடம் கோரத் திட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பில் 25000 கையொப்பங்கள் அடங்கிய விசேட மகஜர் ஒன்றை ஒபாமாவிற்கு இணையத்தின் ஊடாக அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் பதவிய உரிய முறையில் வகிக்கவில்லை. மாறாக ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றார். இதன் காரணமாகவே எதிர்க்கட்சி பலவீனமடைந்துள்ளது.

எனவே ரணில் விக்ரமசிங்கவுடனான உறவுகள் குறித்த மீள் பரிசீலனை செய்யுமாறு பராக் ஒபாமாவிடம் கோர உள்ளோம் என மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளால் சுகாதாரத்திற்கு சவால்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் நாட்டின் சுகாதாரத்திற்கு சவால் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளால் பல்வேறு தொற்று நோய்கள் பரவுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அனுபவங்களின் படி இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளால் சயரோகம், மலேரியா, டெங்கு மற்றும் எச்.ஐ.வி, எய்ட்ஸ் போன்ற நோய்கள் தொற்றுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அரசால் ஏற்கப்பட்டது 13 ஆவது திருத்தச் சட்டம்

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் சட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் ஒரு சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக குரல் கொடுத்த போதிலும், அதனை அரசாங்கத்தின் நிலைப்பாடாகக் கருதப்பட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் நலன்களை உறுதி செய்யும் நோக்கில் நாட்டின் அரசியல் சாசனத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் இணைத்துக் கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் எந்தத் திட்டமும் அரசாங்கத்திற்கு கிடை யாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



# செய்மதியின் செயற்பாடு ஜூன்மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

சீனாவின் ஒத்துழைப்புடன் இலங்கை ஏவிய செய்மதியின் செயற்பாடுகள் அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அதனை ஏவிய தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி விஜித் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விண்ணிற்கு ஏவப்பட்ட செயமதி பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் இலக்கை நோக்கி செலுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சீன நிறுவனமொன்றுடன் இணைந்து விண்ணிற்கு ஏவப்பட்ட இந்தச் செயற்கைக் கோளுக்கு சுப்ரீம் செட் - I என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் சீனாவின் வென்ங் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து நேற்று விண்ணிற்கு ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் குற்றச் செயல்கள் குறைவு

## – பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்த –

(முல்லைத்தீவு)

வடமாகாணத்தில் சட்டவிரோத குற்றச் செயல்கள் இடம்பெறும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகக் குறைந்தளவு குற்றச் செயல்களே இடம்பெறுவதாகவும், இவற்றையும் முற்று முழுதாக ஒழிக்க பொலிஸாருடன் பொதுமக்களும் இணைந்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல்தளுவத்த தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புக்களுக்கான கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமான குற்றச் செயல்கள் மிகவும் குறைந்துள்ளன. இது வரவேற்கத்தக்கதாகும். எனினும் சிறு சிறு குற்றச் செயல்கள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகிறது. அவற்றை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

இதேவேளை இம்மாவட்டத்தில் பொலிஸாருக்கும், மக்களுக்குமிடையே நல்லிணக்கப்பாடு காணப்படுகிறது. இது குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு சாதகமாகக் காணப்படுகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் சட்டவிரோத குற்றச் செயலகள், சிறுவர் துஷ்பிரயோகம், டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த வேண்டும்.

இதன் மூலம் குற்றச் செயல்கள் இடம்பெறுவது குறித்து மக்கள் இனங்கண்டு பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு பொலிஸ அத்தியட்சகர் ஜனக குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 60 இற்கும் மேற்பட்ட சிவில் அமைப்புக்களின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(04)

# ஞானச்சுடர் மலர் வெளியீடு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மிக மலரின் 179 ஆவது மலரான கார்த்திகை மாத வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ச.நவரத்தினராசவேல், மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். மேலும் ஆலயச் சூழலில் உள்ள மணியம் மடத்தில் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

# முரசின் இன்றைய பலன்

(30.11.2012 – வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி. நட்சத்திரம் மிருகசீரிடம் முன்னிரவு 8.30 வரை. சித்தயோகம். திதி துதியை பின்னிரவு 12.33 வரை. இராகுகாலம் 10.44 - 12.14 வரை. சுபநேரம் 6.14 - 7.44 வரை. எமகண்டம் 3.14- 4.44 வரை, குளிகன் காலம் 7.44 - 9.14 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தர்மசங்கடமான சூழல்கள். அன்றாடப் பணியில் மாற்றம். பொறுப்பாக நடந்தால் நன்மை. வரவேண்டியது தாமதமாகும். நண்பருடன் பழைய நினைவு பகிர்வு. |
| ரிஷபம் | பேசி காரியங்கள் முடிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ். உங்களால் மற்றவர்கள் இலாபம். வேலையில் புது பொறுப்புகள். கடின உழைப்பு வெற்றிக்கு வித்திடும். |
| மிதுனம் | உண்மை, நேர்மைக்கு முக்கியத்துவம். சுற்றத்திடம் மரியாதை. தொழில் அனுகூலம். தாராள பணவரவு. உயர்வு தேடிவரும். பழைய பிரச்சினை தீரும். |
| கடகம் | எதிர்ப்புகள் தாண்டுவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயர்வு. புது நம்பிக்கை. அதிக பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குதல். |
| சிம்மம் | கணவன்–மனைவி அன்யோன்யம். கடன் தீரும். சமூகத்தில் மதிப்பு. நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். பிரயாணம். ஆலோசனைகள் உங்களை மாற்றும். |
| கன்னி | மனதில் நம்பிக்கைக் குறைவு, பயம் இருக்கும். கூடுதல் உழைப்பு. உடல்நலம் கவனம். வேலையில் குறுக்கீடுகள் வரும். எதிர்ப்பு வந்தால் விலகு. |
| துலாம் | பிள்ளைகள் மகிழ்ச்சிப்படுத்துவர். உறவினர்கள் ஆதரவு. கல்யாண பேச்சு. சக ஊழியர் வலிய உதவுவார்கள். உபரி வருமானம். தன்னம்பிக்கை துளிர்விடும. |
| விருச்சிகம் | திட்டமிட்டவை நிறைவேறும். நெகிழ்ச்சியடையும் நாள். தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். இல்லறத் துணை விரும்பியது செய்வீர்கள். நற்செய்தி. |
| தனுசு | உதவுவீர்கள். கடின உழைப்பு. வரவை விட செலவு அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். மாணவர்கள் பொறுமை. உறவினர் வருகை. வாகனம், வீடு திருத்தம். |
| மகரம் | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மனநிறைவு தரும். ஆதாய பணவரவு. |
| கும்பம் | வேலைச்சுமை. உறவினர்களால் செலவு. நம்பி ஏமாற வேண்டாம். அலுவலகத்தில் பனிப்போர். பணவரவு சுமார். சிரமம் தரும் பயணம். |
| மீனம் | மனதிற்கு இதமான செய்தி வரும். பொறுமையால் அதிர்ஷ்டம். வரவு உயரும். சமூகத்தில் கூடுதல் கௌரவம். சுப செய்தி. எதிர்பாராத சந்திப்பு ஒன்று. |

# அறிவுறுத்தல் கூட்டம்

(மாங்குளம்)

இவ்வருடம் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதர பரீட்சை நிலையங்களில் நிரந்தர மேற்பார்வையாளர்களாகவும், நிரந்தர நோக்குனர்களாகவும் கடமை புரிபவர்களுக்கும் மற்றும் இணைப்பு நிலையத்தில் கடமைபுரியும் இணைப்பாளர் மற்றும் உதவியாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட நிலையங்களுக்கான உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்படும் இக்கூட்டம் அன்றைய தினம் காலை 9 மணிக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள துணுக்காய் கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

(42)

# மாங்குளம் முல்லைத்தீவில் பாலங்கள் திறந்து வைப்பு

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் முல்லைத்தீவு பாதையில் மேற்கொள்ளப்படும் வீதி அகலிப்பு பணியின் ஓர் அங்கமாக இடம்பெற்று வந்த பாலகட்டுமானப்பணிகள் பாரிய அளவில் மேற்கொள்ளப் பட்டு 30 பாலங்கள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் இப்பாதை ஊடாக ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுக்கு பயணம் மேற்கொள்வோர் சிரமமின்றி மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் பயண நேரத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக மிகுதிப்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும், உரிய நேரத்துக்கு நீதிமன்றம் மற்றும் அலுவலகங்களுக்கு செல்லக்கூடியதாக இருப்பதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 தசாப்த காலமாக கொடிய யுத்தத்தினால் சேதமடைந்தும், பராமரிப்பு இன்றி ஆபத்தான நிலையில் காணப்பட்ட மேற்படி பாலங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டமையும், இப்புனரமைப்புப் பணியினை கடந்தவருடம் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(42)

# பல்கலை மருத்துவ பீடத்திற்கு உடலைத் தானம் செய்த முதியவர்

(திருநெல்வேலி)

தான் இறந்த பின்னர் தனது உடலை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தானமாக முதியவர் ஒருவர் கொடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மருத்துவ பீடத்துக்கு வந்த அவர் உரிய ஆவணப்பத்திரங்களை நிரப்பி மருத்துவ பீடத்தில் கையளித்தார்.

சுன்னாகம் தில்லைகட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நடராஜா எனும் 75 வயதுடைய முதியவரே தான் இறந்த பின்னர் உடலைத் தானம் செய்ய முன்வந்துள்ளவராவார்.

இளவயதிலிருந்தே முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட இவர் ஒரு வர்த்தகராவார். இவரது பிள்ளைகளில் சிலர் வெளிநாடுகளில் வசித்து வரும் நிலையில் மகனுடன் கொழும்பிலும், மகளுடன் சுன்னாகத்திலும் வாழ்ந்து வருகின்றார்.

இவர் இறந்த பின்னர் ஆறு மணித்தியாலங்களுக்குள் இவரது உரித்தாளர் மருத்துவ பீடத்துக்கு அறிவித்தல் வேண்டும். மருத்துவ பீடத்தினரால் அவரது உடல் வீட்டிலிருந்து எடுத்து வரப்படும். பின்னர் மருத்துவ பீட மாணவர்களுக்கான கல்வி செயற்பாடுகளுக்கு இவரது உடல் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(137)





மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினால் கடந்த சனிக்கிழமை கட்டுடையில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் மாணவன் ஒருவனுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (54)



## ஓய்வுக்குத் தயார்

(மும்பை)

என்னால் ஓட்டங்களைப் பெறமுடியவில்லை எனவே நான் ஓய்வுபெற விரும்புகிறேன் இதனைத் தெரிவுக் குழுவினர் தான் முடிவு செய்ய வேண்டுமென டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் டெண்டுல்கர் தற்போது விமர்சனங்களுக்கு உள்ளாகிவருகின்றார். 39 வயதான டெண்டுல்கர் 23 ஆண்டு கால கிரிக்கெட் பயணத்தில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். இந்நிலையில் தனது ஆட்ட நிலைமை பற்றி தெரிவுக் குழுவினரிடம் வெளிப்படையாகப் பேச வேண்டுமென முன்னாள் இந்தியத் தலைவர்களான கபில்தேவ் மற்றும் கவாஸ்கர் ஆகியோர் வலியுறுத்தியிருந்தனர். இந்நிலையிலேயே டெண்டுல்கர் தெரிவுக் குழுத் தலைவர் சந்தீப்பட்டீலை சந்தித்துப் பேசியுள்ளார்.

இது குறித்து டெண்டுல்கர் தெரிவிக்கையில், என்னால் ஓட்டங்களைப் பெற முடியாதுள்ளதுடன் நான் ஓய்வுபெறத் தயாராகவுள்ளேன். எனவே இதனை தெரிவுக் குழுவினர் தான் முடிவுசெய்ய வேண்டுமென குழுத் தலைவரிடம் தெரிவித்துள்ளார்.

## ஓய்வுபெறுகிறார் ரிக்கி



(பேர்த்)

சிறப்பான ஆட முடியாமல் உள்ளமையால் டெஸ்ட் போட்டிளிலிருந்தும் ஓய்வுபெற விரும்புகின்றேன் என அவுஸ்ரேலிய அணி வீரர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.


அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரராக திகழ்பவர் ரிக்கி பொண்டிங். அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிக்கு கப்டனாகவும் பணியாற்றியுள்ளார். இவரது தலைமையில் அவுஸ்ரேலிய அணி 2 முறை உலகக் கிண்ணத்தை வென்றது.

கடந்த உலகக்கோப்பையில் ஏற்பட்ட தோல்வியையடுத்து கப்டன் பதவியிலிருந்தும், ஒருநாள் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இதையடுத்து டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி வந்தார்.

இந்நிலையில், டெஸ்ட் போட்டியிலிருந்தும் தான் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார். இந்த ஓய்வு முடிவை தாமகவே எடுத்ததாகவும், டெஸ்ட் போட்டிகளில் சரியாக விளையாடததால் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பேர்த்தில் நடக்கும் தென்னாபிரிக்க அணியுடனான 3ஆவது டெஸ்ட் போட்டிக்கு பிறகு அவர் ஓய்வு எடுத்துக் கொள்கிறார் எனவும் தெரிவித்துள்ளது. ரிக்கி பொண்டிங் 167 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 13,366 ஓட்டங்களை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சூதாட்ட வழக்கில் சிக்கிய சேர்பிய கால்பந்து வீரர் கைது




சூதாட்ட வழக்கில் தேடப்பட்டு வந்த சேர்பியாவைச் சேர்ந்த கால்பந்து வீரர் அல்மிர் ஜெஜிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சேர்பியாவைச் சேர்ந்த கால்பந்து வீரர் அல்மிர் ஜெஜிக் 1998 முதல் 2000ஆம் ஆண்டு வரையில் இத்தாலியின் விசென்னா அணிக்காக விளையாடினார்.

மேலும் துருக்கியில் உள்ள சில கிளப்புகளுக்காகவும், 2007–11 வரை சுவிட்சர்லாந்து சியாசே–சா அணிக்காகவும் விளையாடினார். இதற்கிடையே, 2011ஆம் ஆண்டு நடந்த மிகப்பெரிய சூதாட்டத்தில் அல்மிர் ஜெஜிக் குற்றம் சாட்டப்பட்டார். இதையடுத்து அவர் தலை மறை வாக இருந்தார். தேடப்படும் குற்றவாளியாக அறி விக்கப்பட்டு அவரை பொலிஸார் தேடி வந்தனர். இந்நிலையில், ஓராண்டுக்கும் மேலாக ஓடி ஒளிந்த ஜெஜிக், நேற்று முன்தினம் மிலன் விமான நிலையத்திற்கு வந்தபோது பொலிஸார் அவரை கைது செய்தனர். இதனை உறுதி செய்த பொலிஸார், ஜெஜிக் மிலன் வந்தபோது எடுத்த வீடி–யோவையும் வெளியிட்டனர். கைது செய்யப்பட்ட ஜெஜிக், கிரெமோனா சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவரிடம் சூதாட்டம் தொடர்பாக விசாரணை நடத் தப்படுகிறது. இந்த சூதாட்ட வழக்கில் இதுவரை 50இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 100இற்கும் மேற்பட்டோர் விசாரணை வளையத்தில் உள்ளனர்.

## அணி இக்கட்டான நிலையில் சச்சின் இருப்பு அவசியம்



இந்திய அணிக்கு முன்பு எப்போதையும் விட இப்போதுதான் சச்சின் மிக அதிகமாகத் தேவைப்படுகிறார். இது போன்ற நெருக்கடியான சமயத்தில் அவரைப் போன்ற அனுபவ வீரர் அணியில் இருப்பது அவசியம் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார். நியூசிலாந்து டெஸ்ட் தொடரின்போது சச்சின் முழு அளவில் தயார் ஆகாதது போலத்தோன்றியது. ஆனால், இங்கிலாந்து தொடருக்கு அவர் முழுமையாகத் தயார் ஆகியிருக்கிறார். அவரால் கணிசமாக ஓட்டங்களைக் குவிக்க முடியாதது துரதிர்ஷ்டவசமானது. அகமதாபாத் டெஸ்டில் அவர் தேவை யில்லாமல் பந்தைத் தூக்கி அடித்து ஆட்டமிழந்துவிட்டார். இல்லாவிட்டால் அந்தப் போட்டியிலேயே அவரால் பெரிய ஓட்ட எண்ணிக்கையை அடித்திருக்க முடியும். மும்பை டெஸ்டின் முதல் இன்னிங் ஸில், பனிசர் வீசிய பந்து அளவுக்கதிகமாகத் திரும்பியதால் ஆட்டமிழந்தார். அதே சமயம், 2ஆவது இன்னிங் ஸில் எல்லாப் பந்தும் சுழன்று திரும்பிய நிலையில் குறிப்பிட்ட பந்து கொஞ்சம் கூட திரும்பாமல் அப்படியே கூஷட் ஆனதால் எல்.பி.டபுள்யு, ஆகிவிட்டார். அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போதுசச்சின் போன்ற அனுபவ வீரர் இருப்பது மிக அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய பயிற்சியாளர் நியமனம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி–20 போட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஆஷ்லி ஜைல்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டி, ருவென்ரி–20 அணிகளை பயிற்றுவித்து வந்த அன்டி பிளவருக்கு ஓய்வினை வழங்கும் பொருட்டே ஆஷ்லி ஜைல்ஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி–20 போட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு ஆஷ்லி ஜைல்ஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி–20 போட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அவர் அன்டி பிளவரின் கீழேயே செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் 3 வகையான அணிகளுக்கான பயிற்றுவிப்பாளராக, இங்கிலாந்தின் முகாமைத்துவ பணிகளில், இங்கிலாந்து அணியின் தயார்படுத்தல்களில் என அன்டி பிளவர் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்த நிலையில் அவருக்கான ஓய்வினை வழங்குவதற்காகவும், நீண்ட காலத்திற்கு அவர் தொடர்ந்து செயற்பட வசதியை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வீழ்த்துவோம் இந்திய அணியை

(லாகூர்)

வேகப்பந்து வீச்சாளர்களின் துணையுடன் இந்திய அணியை வெற்றிகொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என பாகிஸ்தான் அணியின் ருவென்ரி-20 கப்டன் மொகமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர்கள் இந்தியாவில் வைத்து இந்தியத் துடுப்பாட்டவீரர்களுக்கெதிராகச் சிறப்பாகப் பந்துவீசியுள்ளனர். இம்முறையும் அதேபோல் வேகப்பந்து வீச்சாளர்களின் துணையோடுஇந்தியாவிற்கெதிரான தொடரில் களமிறங்கவுள்ளோம்.

பாகிஸ்தான் அணியில் மிகச்சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் காணப்படுகின்றபோதிலும், ஆசிய அணிகளுக்கெதிராக அவர்கள் மிகச்சிறந்த பெறுபேறுகளைக் கொண்டிருக்கவில்லை. சயீட் அஜ் மல், அப்ரிடி ஆகியோர் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஏனைய அணிகளுக்கெதிராக அவர்களது பெறுபேறுகளள விற்கு ஆசிய அணிகளுக்கெதிரான பெறுபேறுகள் அமைந்திருக்கவில்லை.

ஆசிய அணிகள் சுழற்பந்து வீச்சைச் சிறந்த முறையில் எதிர்கொள்ளும் காரணத்தினாலேயே பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர்களில் ஏனைய அணிகளுக்கெதிராகப் பெற்றுக்கொண்டபெறுபேறுகளளவிற்குப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்து அணி அறிவிப்பு

(லண்டன்)

இந்திய அணிக்கெதிரான ருவென்ரி–20, ஒரு நாள் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ருவேட் ப்ரோட் தலைமையில் ருவென்ரி–20 அணியும், அலஸ்ரெயர் குக் தலைமையில் ஒரு நாள் போட்டி அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணிகள் இரண்டிலும் இங்கிலாந் தின் முன்னிலைச் சுழற்பந்து வீச்சாளர் கிரேம் ஸ்வான் இடம்பெறவில்லை. அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ருவென்ரி–20 அணியில் கெவின் பீற்றர்சன் இடம் பெறவில்லை. அவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிகளில் முதல் 3 போட்டிகளுக்கான அணியில் ஜேம்ஸ் அன்டர்சன் இடம்பெற்றுள்ள அதேவேளை, இறுதி 2 போட்டிகளிலும் அவர் பங்குபெற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக ஸ்ருவேர்ட் ப்ரோட் அவ்விரு போட்டிகளுக்குமான அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். முதலாவது ருவென்ரி20 போட்டி டிசம்பர் 20ஆம் திகதி இடம்பெறவுள்ள அதேவேளை, முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி அடுத்தாண்டு ஜனவரி 11ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள அணிகள்:

ருவென்ரி–20 அணி: ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜோனி பெயர்ஸ்ரோ, ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், அலெக்ஸ் ஹேல்ஸ், ஸ்ருவேர்ட் மீக்கர், வைன் மோர்கன், சமித் பட்டேல், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட்

ஒருநாள் சர்வதேச அணி: அலஸ்ரெயர் குக், ஜோனி பெயர்ஸ்ரோ, இயன் பெல், ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் பின், கிறெய்க் கீஸ்வெட்டர், ஸ்ருவேர்ட் மீக்கர், வைன் மோர்கன், சமித் பட்டேல், கெவின் பீற்றர்சன், ஜேம்ஸ் ட்ரெட்வெல், ஜொனதன் ட்ரொட், ஜேம்ஸ் அன்டர்சன் ஸ்ருவேர்ட் ப்ரோ.

## வென்றது நியூசிலாந்து; சமனானது தொடர்





(கொழும்பு)


இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 167 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1–1 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி கொழும்பில் நேற்று நிறைவடைந்தது. இதில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 412 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி முதல் இனிங்ஸில் 244 ஓட்டங்களைப் பெற்றது. இந்நிலையில் 363 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி, இனிங்ஸின் முதல் பந்திலேயே எல்.பி.டயிள்யு. முறையில் பரணவிதான ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து வந்த டில்சான், சங்ககார, கப்டன் மஹேல ஜெயவர்த்தன அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினர். இருப்பினும் மத்திய வரிசையில் களமிறங்கிய சகலதுறை வீரர் மத்தியூஸ் அணியின் நிலையை உணர்ந்து தோல்வியைத் தவிர்க்கும் வகையில் போராடினார். அவருக்கு பக்கபலமாக எந்தவொரு வீரரும் இணைப்பாட்டத்தை வழங்கமையால் இலங்கை அணி தோல்வியைத் தவிர்க்க முடியாமல் போனது. இறுதியில் இலங்கை அணி, போட்டி நிறைவடைய 26 ஓவர்கள் இருக்கும் நிலையில், சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் மத்தியூஸ் 228 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்றார். பிரசன்ன ஜெயவர்த்தன 28, குலசேகர 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் செளத்தி, பௌல்ட் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1–1 என்ற கணக்கில் சமநிலையானது. போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்லர், தொடர் நாயனாக ஹேரத் தெரிவானார்கள். 14 வருடங்களின் பின்னர் இலங்கை மண்ணில் நியூசிலாந்து அணி வெற்றயைப் பதிவாள்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## விளையாட்டுச் செய்திகள்





தேசிய இளைஞர் விளையாட்டு சம்மேளனம் நடத்திய தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் யாழ். மாவட்டம் சார்பாக சிறந்த கூடைப்பந்தாட்ட வீரருக்கான விருது எஸ்.வாகீசனுக்கும், சிறந்த வலைப்பந்தாட்ட வீரங்கனைக்கான பரிசில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சி.வத்சலாவுக்கும், குண்டு எறிதல் போட்டியில் சிறந்த வீரரருக்கான விருது நிமலேந்திராவுக்கும் வழங்க்ப்பட்டது.

இதேவேளை வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகளில் சம்பியன்களான யாழ். மாவட்ட அணிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட ஒட்டுமொத்த அணி வீரர்களையும், வலைப்பந்தாட்ட அணியினரையும் காணலாம். (93)

# 85 ஓட்டங்களால் மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 85 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிக்குமிடையிலான சிநேகபூர்வ ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த 24ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோச் 43, ஜெயந்திரன் 36, நிருபன் 26, சௌமிதரன் 28, நிரோஜன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யது 34 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கீதன் 18 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 34 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கரன் 30, சுதாகரன் 25, றொசாந் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் 25 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கபிலன் 17 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள நிலையில், சிநேகபூர்வமான போட்டிகளில் யாழ். மத்திய கல்லூரி அணி பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# தேசிய மெய்வல்லுநர் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

38ஆவது தேசிய மெய்வல்லுநர் விளையாட்டு விழா இன்றைய தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டிகளில் வடமாகாணம் சார்பாக 40 வீரர்களும், 40 வீராங்கனைகளும் பங்கு கொள்கின்றனர். இவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு சென்றடைந்தனர்.

வடமாகாண மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வீரர்களே மேற்படி போட்டிக்கு வட மாகாணம். சார்பாகச் சென்றவர்களாவர். இப் போட்டி மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (93)

# விரைவில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டி அடுத்த மாத நடுப்பகுதியில் இடம் பெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன

இப்போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள் பங்குபற்றும் என்றும், இப்போட்டிகள் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பங்குபற்றவுள்ள அணிகளைப் போட்டிக்குத் தயார்படுத்திக் கொள்ளுமாறும் மேற்படி வட்டாரங்களிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



டில்சான்



ரதீசன்

# டில்சான், ரதீசன் கலக்கல் பற்றிக்ஸ் இனிங்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

டில்சான், ரதீசன் ஆகியோரின் சிறப்பான சகலதுறை ஆட்டத்தின் மூலம் கனகரத்தினம் மத்திய மகா 'வித்தியாலய அணியை இனிங்ஸால் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிகொண்டது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த வாரம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி டில்சானின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 22.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 21 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனஸ்ரன் ஆறு ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டில்சான் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், நிருசிகன் மூன்று ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 41.4 ஓவர்கள் நிறைவில், ஏழு விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அனோஜன் 25, ரதீசன் 27, டில்சான் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சீவன் 18 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

101 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மகாவித்தியாலய அணி ரதீசனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியால் 19 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்து வீச்சில் ரதீசன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 82 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

# தலைவரைக் காப்பாற்றுவதற்கு நெடியவன் பணம் தர மறுத்தார்!

**முன்னாள் புலிகளின் தலைவர் கே.பி. டி.பி.எஸ்.ஜெயராஜிற்கு வழங்கிய பேட்டியில்...**





ஒரு கட்டத்தில் பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி என்னைத் தொடர்பு கொண்டு என்மூலம் அவரது குடும்பத்தை பாதுகாப்பாக வெளியேற்ற விரும்பினார். நான் ஒரு சிறிய விமானம் மூலம் உள்ளே சென்று பிரபாகரனின் குடும்பத்தை வான்வழியாக வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்தேன். அதற்கான செலவு 3.5 மில்லியன் டொலர்கள். அந்தளவு பணம் என்னிடம் இருக்கவில்லை. ஆனால் என்னால் தொடர்ச்சியான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதிலும் வெளிநாட்டு நிதியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த நெடியவன் அந்தப் பணத்தை எனக்குத் தருவதற்கு மறுத்துவிட்டார்.

அதற்குள் மே மாத நடுப்பகுதியில் நிலமை வெகுவாக மோசமடைந்து விட்டது. இப்போது நடேசன் மற்றும் சூசை போன்றவர்களாலும் ஒரு யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவதற்காக ஏதாவது செய்யும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். ஆயுதங்களை கீழே போடுவதாக அறிவிக்கும்படியும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அப்போது நான் ஒரு பைத்தியக்காரனைப் போலவே இருந்தேன். உறக்கமில்லை எனக்கு நீரிழிவு நோய் இருந்தும்கூட நேரகாலத்துக்கு உணவு கொள்ளவில்லை. நான் மேலும் மேலும் முயற்சி செய்தேன். நான் ஆயுதங்களை மௌனிப்பதாகக்கூட அறிவித்தேன், அது நாங்கள் ஆயுதங்களை கீழே போடுகிறோம் என்பதை சொல்வதற்காக தங்கள் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ளும் விதத்தில் அறிவிக்கும் ஒரு செயற்பாடு.

ஆனால் எல்லாமே மிகவும் தாமதமான செயற்பாடுகளாகி விட்டன.

**கேள்வி:** அது எப்படி முடிவடைந்தது என்று நாங்கள் அனைவரும் அறிவோம். உங்கள் வலியையும் மனவேதனையையும் நான் புரிந்து கொள்ளுகிறேன், ஆனால் பிரபாகரன் உங்கள் திட்டத்துக்கு சம்மதித்திருந்தால் இலங்கை அரசாங்கம் அதற்கு இணங்கியிருக்குமா ஏனென்றால் இராணுவம் உண்மையில் வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தது?

**பதில்:** நோர்வேயினர் மிகவும் நம்பிக்கையுடனிருந்தார்கள் ஏனென்றால் பிரபாகரன் சம்மதித்தால் நான்கு இணைத் தலைமை நாடுகள் மற்றும் ஐநா என்பனவற்றால் கொழும்பினை சம்மதிக்க வைக்க முடியும் என்று நம்பினார்கள். ஆனால் இங்கு மிகவும் முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால் இலங்கை அரசாங்கம் இது சம்பந்தமாக ஒரு போதும் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை. இந்தத் திட்டம் பற்றி உத்தியோகப் பற்றற்ற விதத்தில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் உத்தியோக பூர்வமாக இதைப்பற்றி அவர்களிடம் பிரேரிக்கப் படவில்லை, ஏனெனில் எல்.ரி.ரி.ஈ அதற்கு ஒருபோதும் சம்மதிக்கவில்லை.

**கேள்வி:** எனவே இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முடியாது. எல்.ரி.ரி.ஈ. குறிப்பாக அதன் தலைவர் அவரது உறுதியான மற்றும் விட்டுக்கொடுக்காத தன்மையின்ால் இந்த நிலைக்கு பெரும் பங்களிப்பை செய்துள்ளார். புலிகள் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால், தங்களது சொந்த உயிர்களுக்கு அப்பால் பெருமளவிலான பொதுமக்களின் உயிர்களையும் அவர்களால் காப்பாற்றியிருக்க முடியும்.

**பதில்:** இதுதான் எனது ஆறாத் துயரம். இதுதான் தமிழர்களின் சோகம். ஒரு முன்னாள் மூத்த எல்.ரி.ரி.ஈ என்ற வகையில் இது எனக்கு ஒரு சுமையாக உள்ளது, அதனுடன்தான் நான் வாழ்கிறேன்.

# கணக்குப் பண்ணுவோம்...



பலாப் பழத்தை வெட்டாமலேயே, அதிலுள்ள சுளைகளின் எண்ணிக்கையை அறிந்துகொள்ள, பழம் பெரும் கணித நூலான, "கணக்கதிகாரம்" ஒரு வழி சொல்லியிருக்கிறது.

அதெப்படி பலாப்பழத்தை வெட்டாமலேயே அதில் உள்ள சுளைகளை அறியமுடியும்? விந்தையாக இருக்கிறதல்லவா? ஆனால், நம் பழந்தமிழ் கணக்கியல் இதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது விந்தைதான்!

**"பலாவின் சுளையறிய வேண்டுதிரேல் ஆங்கு**
**சிறுமுள்ளுக் காம்பருக் கெண்ணி வருவதை**
**ஆறிற் பெருக்கியே ஐந்தினுக் கீந்திடவே**
**வேறெண்ண வேண்டாஞ் சுளை"**

ஒரு பலாப்பழத்தை அறுப்பதற்கு முன்பு அதிலுள்ள சுளைகள் இவ்வளவென்று கண்டு பிடிக்கலாமா என்ற கேள்விக்கு,

பலாப்பழத்தின் காம்புக்கு அருகில் உள்ள சிறு முட்களை - எண்ணிக்கையை 6 ஆல் பெருக்கி வரும் விடையை 5 ஆல் வகுக்கக் கிடைக்கும் ஈவானது பழத்தினுள் உள்ள சுளைகளின் எண்ணிக்கையாகும். அதாவது,

பலாப்பழத்திலுள்ள முட்களின் எண்ணிக்கை: 100.

இதை 100 x 6 = 600 பின்பு இந்த 600 ஐ 5 ஆல் வகுக்க, 120 வருகிறது. இதுவே சுளையின் எண்ணிக்கையாகும்.

அதேபோல பூசணிக்காயை உடைக்காமல், அதிலுள்ள விதைகளின் எண்ணிக்கையைக் கூறவும் இக் கணக்கதிகாரத்தில் பாடல் ஒன்று உள்ளது.

"கீற்றெண்ணி முத்தித்துக் கீழாறினால் மாறி
வேற்றையஞ்சு தன்னில் மிகப்பெருக்கிப் பார்த்ததிலே
பாதி தள்ளி மூன்றிற் பகிர விதையாகும்
பூசணிக்காய் தோறும் புகல்"



ஒரு பூசணிக்காயின் கீற்றுகளை எண்ணி, அதை மூன்று, ஆறு, ஐந்து இவற்றால் பெருக்கி வரும் விடையைப் பாதியாக்கி, மீண்டும் மூன்றால் பெருக்கினால் வருவதுதான் விதைகளின் எண்ணிக்கை.

அதாவது, கீற்றுகளின் எண்ணிக்கை x என்க.

இதை மூன்று, ஆறு, ஐந்து ஆகியவற்றால் பெருக்கினால், 90 x ஆகிறது. இதை பாதியாக்கினால் 45 x ஆகிறது. பின்னர் மூன்றால் பெருக்க 135 x ஆகிறது. ஆக, பூசணிக்காயின் கீற்றுகளின் எண்ணிக்கையை 135 ஆல் பெருக்கினால் விதைகளின் எண்ணிக்கை கிடைக்குமாம்!

**- வேம்புமகள் -**

# சமூகத்தின் மூளைகள் என்போர் சரியாகச் செயற்பட வேண்டும்!

**- எதுவரை பேட்டியில் என்.நடேசன் -**

இனம் மதம் சாதி என்பவற்றால் சமூகங்கள் உருவாகும் போது அங்கு அதைப்பாவித்து பிணக்குகளை உருவாக்குவது பலருக்கு சாதகமானது. உண்மையான, மக்கள் மீது நம்பிக்கையுள்ள அரசு இப்படியான குழுக்களை உடைத்து மொத்தமான தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்கவேண்டும். மத கலாசார உணர்வுகளுக்கு சட்ட உறுதி அளித்துவிட்டு அரசியல் குழுவாகாமல் தடுப்பதன் மூலம்தான் நாட்டில் அமைதி உருவாகும்.

அவுஸ்ரேலியாவில் பதினைந்து ஆண்டுகளின் முன்பு போலின் ஹான்சன் என்ற பெண்மணி ஆசிய எதிர்ப்புக் கட்சி தொடங்கியபோது பத்து வீதமான மக்கள் அதை ஆதரித்தார்கள். பெரிய இரண்டு கட்சிகளும் ஜனநாயக முறையில் இணைந்து அவரை எதிர்த்து அரசியலில் இருந்து அழித்து விட்டார்கள். காரணம் அந்தப் பெண்ணினால் ஆசிய நாடுகளுடனான வியாபாரம் பாதிக்கப்படும் என்பதே. அதன் விளைவாக நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதால்.

அவுஸ்ரேலிய பூர்வகுடிகள் சட்டரீதியாக சம உரிமை பெற்று இருந்தாலும் நூற்றாண்டுகளாக நீடிக்கும் புறக்கணிப்பு சாதாரணமானது அல்ல. அவர்கள் நிலைமை நான் வசித்த கால் நூற்றாண்டுகளில் பல மடங்கு முன்னேறியுள்ளது. அவர்களது நில உரிமைகளை கொடுப்பதற்கு பல அரசியல்வாதிகளும் அறிஞர்களும் முன்னிற்கிறார்கள். அவர்கள் அவுஸ்ரேலியா என்ற நாட்டுக்குள்தான் தங்கள் உரிமையை கேட்கிறார்கள்.

ஒரு சிக்கலான உளவியற் பின்னலில் இலங்கைச் சமூகங்கள் சிக்குண்டுள்ளன. இன, மத அடையாளங்களை முன்னிறுத்தி முன்னெடுக்கப்பட்ட அரசியல் இந்த உளவியலைக் கட்டமைத்துள்ளன. இது பல நூற்றாண்டுகளின் தொடர்ச்சி. இன்றைய நவீனகாலத்தில் இது இன்னும் வலுவாகி ஊடகங்கள், கல்வி மற்றும் சமூக நிறுவனங்கள், இலக்கியம் எனச் சகல துறைகளினூடாகவும் வளர்த்தெடுக்கப்படுகிறது.

இரண்டு பக்கத்தினரதும் தவறுகள் ஏற்றுக்கொள்ளப்படுவது முக்கியம். இது அறிவாளிகளிலும் சிந்தனாவாதிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இருந்து உருவாகவேண்டும். காரணம் இவர்கள்தான் சமூகத்தின் மூளை போன்றவர்கள். இவர்களது மாற்றம் சமூகத்தின் பல பாகத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும். இதன்பின் சமூகத்தில் நல்லிணக்கத்தை உருவாக்கும் வழிமுறைகள் பலரால் ஆராயப்பட்டு நாட்டின் கொள்கைப் பிரகடனமாக வேண்டும். அவுஸ்ரேலியா, கனடா நாடுகளின் பல்கலாசாரம் போல் இதை பாடசாலைகளில் குழந்தைப்பருவத்தில் இருந்து படிப்பிக்கவேண்டும். இதன்பின்பு சட்டம் அதற்கேற்ப திருத்தப்பட வேண்டும்.



Dr.Nadesan

சிலவற்றை உடனடியாகவும் பலவற்றை படிப்படியாகவும் செய்யலாம். கலாசாரரீதியான மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நேரத்தில் பாடசாலைகளிலும் வேலைத்தலங்களிலும் தேசிய ஒருமைப்பாட்டைத் தர்க்கரீதியாக எடுத்துச் செல்லவேண்டும். இலங்கையில் சிங்களம், தமிழ் என்ற இரண்டு மொழிகளையும் கட்டாயமாக இருபகுதியினரும் கற்க வேண்டும். இன மொழி மத ரீதியான அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டு பாகுபாடுகளைத் தூண்டுபவர்கள் மீதும் இனவாத ஊடகங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். பாடசாலைகள் மத இன வேறுபாடு இல்லாது எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேணும். ஆரம்பகாலத்தில் சிங்கப்பூரின் சில சட்ட நடைமுறைகளைப்போல இலங்கையிலும் அமுல்படுத்துவது தவிர்க்க முடியாது.

# வரலாறு எழுத ஆசைப்பட்டார்!


பாரதியாரின் உண்மையான வரலாற்றையும், அரிய நினைவுகளையும் ஆனந்த விகடன் பத்திரிகையில் தொடராக எழுத பாவேந்தர் ஒப்புக்கொண்ட நேரம். பாரதியாரைப் பற்றி அதுவரை வெளிவந்த நூல்கள் யாவற்றையும் பாவேந்தரிடம் அனுப்பி வைப்பதாக விகடன் அலுவலகம் ஒப்புக்கொண்டது.

அப்போது பாவேந்தர் கூறியது: "இதிலே இன்னொரு முக்கியமான செய்தி. பாரதியாரின் மகளேகூட அது எழுதின புத்தகத்திலே, நினைவுப் பிசகாக ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன்.

"புதுவையிலிருக்கும்போது எங்க அப்பா பக்கத்து ஊரிலிருந்த காளி கோயிலுக்குச் சாமி கும்பிட அடிக்கடி போய் வருவாரு" என்று எழுதியிருக்காம். இதுல முக்கியமா கவனிக்க வேண்டியது ரெண்டு. ஒன்று. அது (பாரதியார் மகள்) குறிப்பிட்ட பக்கத்து ஊரு பிரெஞ்சு எல்லைக்கு உட்பட்டதல்ல, இந்திய எல்லைக்கு உட்பட்டது. எனவே, பிடிவாரண்டுக்குத் தப்பித்துப் புதுவையில் இருக்கும் பாரதியார் அங்கு சென்றால் எப்போது அவரைப் பிடிக்கலாம் என்று வலை விரித்துத் திரியும் ஆங்கில அரசாங்கத்து ஒற்றர்கள் அவரைச் சும்மா விடுவார்களா?

இரண்டாவது: இது குறிப்பிடுகிற ஆண்டிலே புதுச்சேரியில் பாரதியார் இருக்கிறபோது, இது விவரம் புரியாத சின்னக் குழந்தை. பாரதியார் இருக்கும் வீட்டு மாடிக்கும் நான்தான் இதைத் தூக்கிப் போவேன்" என்று சொல்லி தனது வலது கரத்தால் இடது தோளைத் தட்டிக் காட்டுகிறார். "அது என் தோள் மேலே வளர்ந்த புள்ளை. இதைப் பற்றி அதுகிட்ட ஒரு நாள் கேட்டேன்." "இல்லை மாமா, நினைவுப் பிசகாக எழுதிட்டேன்"னு சொல்லுச்சு. "நீயே இப்படி எழுதினா ஊருல இருக்கிற கண்ட பயலுக ஏன் தப்புத் தப்பா எழுத மாட்டான்"னு கண்டிச்சேன்.

"அதனால அப்பழுக்கில்லாத பாரதியார் வரலாற்றை



கண்டிப்பா நான் எழுதித்தான் ஆகணும். அதனால, நாமும் அது சம்பந்தமான புத்தகங்களையெல்லாம் திரட்டணும்" என்று உறுதியுடன் கூறி முடிக்கிறார் பாவேந்தர்.

**('நினைவலைகளில் பாவேந்தர்' என்ற நூலில் கவிஞர் பொன்னடியான்)**

# கடைசிவரை காணிக்கை!

ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒருநாளில் பொழுது விடிவதற்கு வெகு முன்னதாகவே எழுந்து, தனது காரைத் தானே ஓட்டிக் கொண்டு பழைய மவுண்ட் ரோட் காசினோ தியேட்டருக்குப் பக்கத்தில் உள்ள சந்தில் ஒரு கட்டடத்தின் முன்பு காரை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே செல்வார் அந்தப் பிரமுகர்.

இவருக்காகவே காத்திருப்பது போலக் காணப்படும் அந்தப் பெரியவர் இவரை வரவேற்பார். வந்தவர் பெரியவரை நமஸ்கரித்து விட்டு அவரது கையில் ஒரு கவரைக் கொடுப்பார். ஆவலுடன் அதைப் பெற்றுக் கொள்ளும் பெரியவர் கவரைப் பிரித்து உள்ளே உள்ள நூறு ரூபா நோட்டுக்களை எடுப்பார்! தடவித் தடவித் கவனமாக எண்ணிப் பார்ப்பார்! கணக்காக 20 நூறு ரூபா நோட்டுக்கள் இருக்கும்! ஆமாம் 2,000 ரூபாய்!


வந்தவரைப் பெரியவர் உட்காரச் சொல்லுவார். ஆனாலும் அவர் மரியாதையுடன் நின்றுகொண்டே இருப்பார்! அவருக்குக் காபி கொடுக்கச் சொல்வார் பெரியவர். குடித்துவிட்டு கும்பிட்டுவிட்டு வெளியில் வந்து காரைத் திருப்பிக் கொண்டு விடிவதற்கு முன்பே வீடு வந்துவிடுவார் அந்தப் பிரமுகர்!

அவர்?

ஜெமினி ஸ்டுடியோ அதிபர் அமரர் எஸ்.எஸ்.வாசன்!

தொண்டு கிழவராகி மறையும் வரையில் அந்த 2000 ரூபா காணிக்கையை ஒவ்வொரு ஆண்டும் தனது பிறந்தநாளான செப்டம்பர் 17 அன்றைக்குத் தவறாமல் வாசனிடம் பெற்று வந்த அந்தப் பெரியவர்? தந்தை பெரியார் அவர்கள்தான்.

ஆனந்த விகடன், ஜெமினி ஸ்டுடியோ எல்லாம் தோன்றுவதற்கு முன்னால் பெரியாரின் விடுதலை, குடியரசு ஆகிய பத்திரிகைகளுக்கு விளம்பரம் சேகரித்து ஈரோட்டுக்கு அனுப்பி வைத்து, அதற்காக பெரியார் கொடுத்த கமிஷன் தொகையைப் பெற்று வந்தவர் வாசன்!



ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்னர், செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெரியார் எழுதிய நூல்களைப் புத்தகக் கடையாக வைத்து விற்று, அந்தப் பணத்தை ஒழுங்காகப் பெரியாரிடத்தில் ஒப்படைத்தார் வாசன்!

அன்றைக்குப் பெரியாருக்குப் பட்ட நன்றிக் கடனுக்காக அவரது வாழ்நாள் முழுவதும் பெரியார் பிறந்த நாளில் அன்பு வட்டி செலுத்தி வந்தார் எஸ்.எஸ். வாசன்!

**('எம்.ஜி.ஆர். - சிவாஜி என் இரு கண்கள்' என்ற நூலில் ஆரூர் தாஸ்)**

# தெரிந்துகொள்ள...

✷ வேப்பமரத்தின் மாற்றுப் பெயர்கள் அருட்டம், கடிப்பாறை, அருணாவதி, கோமுட்டி, பூமாரி, மந்தமரம் ஆகியவை.

✷ மெக்சிகோவினர் மஞ்சள் நிறப் பூக்களை இறந்தவர்களுக்குரியதாகக் கருதி பயன்படுத்துகிறார்கள். பிரான்சில் மஞ்சள் நிறம் நம்பிக்கைத் துரோகத்திற்கு அடையாளம், ரஷ்யாவிலோ மஞ்சள் நிறப் பூ பெண்ணுக்கு அவமரியாதை அளிக்கும் பூவாகக் கருதப்படுகிறது.

✷ கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்து அது தன்னுடைய உருவமென்று அடையாளம் கண்டுகொள்ளும் அறிவு மனிதர்களுக்கும், மனிதக் குரங்குகளுக்கும் டொல்பின் மீன்களுக்கும் மட்டுமே உண்டு.

✷ நாய், பூனை போன்ற வீட்டு விலங்குகள் தன் உடலைச் சுருட்டிக் கொண்டு, உடலின் வெப்பத்தைக் காப்பாற்ற தலையை உடலின் உள்ளே பதித்துத் தூங்கும்.

✷ சிலவகை மான்கள் தூங்கும்போது தமது சுவாச சக்தியின் மூலம் பகை விலங்குகளின் நடமாட்டத்தை உணரும் சக்தி கொண்டவை.

✷ யானை, குதிரை ஆகியவை நின்றுகொண்டே தூங்கும் பழக்கம் உடையவை.




✷ அவுஸ்ரேலியாவில் கங்காருவைப் போல புகழ்பெற்ற மற்ற ஒரு விலங்கு கோலாவாகும். இது தன் குட்டிகளைச் சுமந்தபடி மரத்துக்கு மரம் தாவும்.

# எதிரெதிர்ப் பிரச்சினைகள்!

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த பல நாடுகள் படாதபாடு பட்டுக் கொண்டு இருக்கும்போது, மக்கள் தொகையை அதிகப்படுத்த பெருமுயற்சி எடுத்து வருகிறது அவுஸ்ரேலிய அரசு.

நிலப்பரப்பில், இந்தியாவை விட பல மடங்கு அதிகம் உள்ளது அவுஸ்ரேலியா. இந்தியா, 32 இலட்சத்து 80 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது, அவுஸ்ரேலியா, 76 இலட்சத்து 82 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது.

இந்தியாவின் சனத் தொகையோ 117 கோடி.



அவுஸ்ரேலியாவில் 16 கோடி தான். அவுஸ்ரேலிய ஆண்கள் பலர், என்ன காரணத்தாலோ குழந்தை கொடுக்கும் ஆற்றலை இழந்து வருகின்றனர். எனவே, அவுஸ்ரேலிய நாட்டின் பல நகரங்களிலும், "விந்து வங்கிகள்" வேகமாக திறக்கப்பட்டு வருகின்றன.


அவுஸ்ரேலிய பத்திரிகை ஒன்று, இவ்வித "விந்து வங்கிகள்" பற்றி விரிவாகக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தக் கட்டுரையிலிருந்து கிடைத்த தகவல்கள்:

fertility society of australia என்ற அமைப்பின் முக்கிய உறுப்பினர், டாக்டர் ஜோன் மக்பெயின். நாட்டில் உள்ள, "தகுதி" படைத்த "டொனர்"கள் - தானம் செய்பவர்களுக்கு உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில்:

"உங்கள் நாட்டிற்கு, உங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு, உங்கள் உதவி தேவை. 18 முதல் 45 வயது உடைய ஆண்களே... உங்களது, "விந்து"வை தானம் செய்யுங்கள். வெட்கப்படாதீர்கள். நீங்கள் செய்யும் தானத்தால், அவுஸ்ரேலிய சமூகம் வளர்ச்சி அடையும்!

குழந்தையில்லாமல் கவலையும், துன்பமும், அவப்பெயரும் பெற்ற தம்பதியருக்கு, உங்களால் சந்தோஷத்தையும், மனநிம்மதியையும் கொடுக்க முடியும்!

அவுஸ்ரேலியாவில், 10 ஆண்களுக்கு ஒருவர் என்ற கணக்கில் மலட்டுத்தன்மை பெருகி வருகிறது. பிறக்கும், 250 குழந்தைகளில் ஒன்று செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு பிறக்கிறது.



வெளிநாடுகளில் இருந்து குழந்தைகளை தத்தெடுத்துக் கொள்ளும் சட்டம், ஐரோப்பிய நாடுகளைப்போல அல்லாமல், அவுஸ்ரேலியாவில் மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளது.

எனவே, செயற்கையாக கருவூட்டும் முறையை பலரும் இப்போது நாட ஆரம்பித்துள்ளனர் ஆனால், "விந்து" தானம் கொடுப்பவர்கள் நம் நாட்டில் குறைந்து வருகின்றனர். இதற்கு கூச்சம் ஒரு காரணமாக இருந்தாலும், "நாம் கொடுத்த உயிர், எங்கோ, எப்படியோ, முகம் தெரியாமல் வாழுமே!" என்ற பாசம் கலந்த எண்ணமும் காரணமாக அமைந்து விடுகிறது. இதனால், பிள்ளைப் பேறற்ற தம்பதியர், செயற்கை முறை கருவூட்டல் பெற நீண்டநாள் காத்துக் கிடக்க வேண்டிய அவல நிலையும் தோன்றியுள்ளது.

நாடு வளர... மக்கள் சக்தி தேவை. நீங்கள் கொடுக்கும் உயிர், நாளை நாட்டையே ஆளும் பிரதமராகக் கூட வரலாம்! எனவே, சுயநலம் இல்லாத இந்த தேசப் பணிக்கு உதவுங்கள்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தானம் கொடுக்க விரும்புபவர்களுக்கு, "எய்ட்ஸ்" போன்ற நோய் இருக்கிறதா என முதலில் சோதனை செய்கின்றனர். பின் அவரது, "விந்து"வில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கையை கணக்கிடுகின்றனர். எவ்வித குறையும் இல்லாத பட்சத்தில், தானம் கொடுப்பவர் மீண்டும், மீண்டும் அழைக்கப்படுகிறார்.

இந்த தானத்திற்கு பண உதவி ஏதும் கொடுப்பதில்லை, போக்குவரத்து கட்டணம், அதுவும், தானம் செய்பவர் விருப்பப்பட்டால் மட்டும் அளிக்கின்றனர்.

- பிரச்சினைகளின் பரிமாணங்கள் நாட்டுக்கு நாடு எதிர், எதிர் திசையில் இருப்பதைப் பார்த்தீர்களா?




# யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

## எமது பாடசாலை பற்றி...

எமது பாடசாலை 1962.03.10.இல் அமரர் உயர்திரு வே. சரவண முத்து (ஸ்தாபகர்) அவர்களால் அமரர் உயர்திரு. சிவகனகசபாபதி அவர்களின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது.

எமது பாடசாலை விவசாயிகளும், வர்த்தகர்களும், ஆன்மீக வாதி களும் செறிந்து வாழும் கோண்டாவில் கிராமத்தில் இயற்கை அழகு மிக்க அமைதியான சூழலில் அமைந்துள்ள பாடசாலையாகும். இது இராமகிருஷ்ண பரமகம்சரின் பெயரைக் கொண்டிருப்பதால் மேலும் தூய்மையடைகிறது.

கோண்டாவில் கிராமத்தில் கல்வி எனும் கலங்கரை விளக்கை ஏற்றவும் ஒழுக்கம் எனும் உணர்வை உன்னதமாக பெறச் செய்வதுமே இப்பாடசாலையின் நோக்கமாகும். தற்போது கட்டிக் கொண்டிருக்கும் புதிய மண்டபத்திற்கான நிதி வடக்கின் வசந்தத்திட்டத்தின் கீழ் அமைச்சர் கே. எஸ். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கடும் முயற்சியால் 4.6 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. கடந்த க.பொ.த. சாதாரணதரம் பெறு பேற்றில் யாழ். வலயத்தில் 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. க.பொ.த. உயர்தர பெறுபேற்றிலும் எமது பாடசாலை உயர்தர வீதத்தில் நிலை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் 3A பெறுபேற்றினை இரு மாணவிகள் வரலாற்றில் முதல் தடவையாக பெற்றுள்ளதோடு, 30 மாணவர்களில் 20இற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத் திற்கும் கல்வியியற் கல்லூரிக்கும் அனுமதிபெறத் தகுதி பெற்றுள்ளனர்.

தற்போதைய அதிபரின் காலத்தில் பாடசாலை கல்வி வளர்ச்சி பௌதிக வளர்ச்சியிலும் அபிவிருத்தியைப் பெற்றதோடு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிஅபிவிருத்தி அமைச்சரிட



6s நிகழ்ச்சித்திட்டத்தின்போது...

மிருந்தும் திணைக்களத்திடமிருந்தும் பின்வருவனவற்றை எதிர்பார்த்து நிற்கின்றது.

1) 1AB பாடசாலைக்குரிய நவீன விஞ்ஞான கூடம்
2) அழகியல் பாடங்களுக்கு (சித்திரம், சங்கீதம், நடனம்) தனியான அறைகள்
3) செயன்முறை தொழில்நுட்பம், விவசாயம், மனைப்பொருளியல் பாடங்களுக்கு தனியான ஆய்வு கூடம்.
4) ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை.
5) ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான மலசலகூட வசதி.
6) ஆரம்பப் பிரிவு பாடசாலைக்கான கட்டடத்தொகுதி.



6s நிகழ்ச்சித்திட்டத்தின்போது பொறுப்பாசிரியர் திருமதி கௌ.மாணிக்கராசா உரையாற்றுகையில்...



பாடசாலை அதிபருடன் ஆசிரியர் குழாம்



## அதிபர்
## திரு.எஸ்.வாமதேவன்

இவர் 1993 இல் பிரதி அதிபராகக் கடமையாற்றி 2001 இல் இருந்து அதிபராக கடமையேற்றார். இவர் அதிபரான காலத்தில் புதிய மாடிக்கட்டடம் அலுவலகம், கணனி அறை, Multi - Mice அறை, தற்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய மண்டபம் போன்ற பௌதிக அபிவிருத்தியுடன் கல்வி அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளது. யுத்த காலத்தில் விடுபட்டிருந்த வணிகப்பிரிவு உயர் தரத்தில் 2011ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பானிய ஜெயிக்கா செயற்திட்டத்தின் (5S) இறுதி வட்டத்தில் யாழ். மாவட்டத்தில் பத்து பாடசாலைக்ளில் முதலிடத்தினை பெற்றதோடு 6S செயற்திட்டத்தில் இலங்கையில் 30 பாடசாலை களில் 2011ஆம் ஆண்டு நான்காவது இடத்தினைப் பெற்று ரூபா 95,000 பரிசுத் தொகையினையும் பெற்றுக் கொண்டமைக்கு தற்போதைய அதிபரின் கடும் முயற்சியே காரணமாகும்.

# கிளிநொச்சியில் பண்பாட்டு விழா

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப்பேரவை நடாத்தும் பண்பாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப1.00 மணிக்கு கூட்டுறவுச்சபை பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது மாவட்ட அரசஅதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில். நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ப.ஜெயராணியின் வரவேற்புரை, மகா தேவ ஆச்சிரம சிறுவர் இல்ல மாணவிகள் வரவேற்புப்பாடல், - கிளிநொச்சி எடிசன் கல்லூரி மாணவிகளின் கண்ணன் அபிநய ஆடல், பூநகரி முத்தமிழ் கலா இலக்கிய மன்றத்தின் வில்லுப்பாட்டு , தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்குதல், கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகளின் புத்தாக்க ஆடல், புலோப்பளை கிழக்கு சென் பீற்றர் கலைமன்றத்தின் மீனவ ஆடல், கலைக்கிளி விருது வழங்கல், பாரதிபுரம் சபா, நாடக மன்றத்தின் இசை நாடகம் அரிச்சந்திர மயான காண்டம், கண்டாவளை கோரக்கன் கட்டு, புத்தொளி கலா மன்றத்தின் உலகம் படைப்போம்-சமூக நாடகம் என்பன இடம் பெறவுள்ளது. (90)

# கல்வயல் பகுதியில் நீர்ப்பம்பிகள் திருட்டு

(சாவகச்சேரி)

கல்வயல் பகுதியில் தற்போது மின்சார நீர்ப்பம்பிகள் திருட்டு அதிகரித்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.அண்மைக்காலமாக கல்வயல், பெருங்குளம் பகுதிகளில் வீடுகளில் உள்ள நீர் இறைக்கும் மின்சார பம்பிகள் திருடப்பட்டுள்ளன பெருங்குளம் பகுதியில் கடந்த வாரம் ஒருவரின் வீட்டுக் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த பம்பி இரவு வேளையில் திருடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கல்வயல் ஓராம்கட்டை ஐயனார் கோயில் வீதியிலுள்ள தில்லை நடேசு ஞானாம்பிகை என்பவரது வீட்டுக்கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மின்சார நீர்ப்பம்பி ஒன்று வீட்டில் ஆட்கள் இல்லாத வேளை பார்த்து பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது. பொருத்தப்பட்ட நீர்க்குழாய்களை அறுத்து விட்டு இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)



யாழ் வர்த்தகத் தொழில்துறை வேளாண் மகளீர் ஒன்றிய நிறுவுனரும் பணிப்பாளருமான லயன் எஸ்.ஜெ.செவ்வராஜாவின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச அபிவிருத்தி வங்கியூடாக ஒன்றிய தொழில் முயற்சியாளருக்கான இரண்டாம் கட்ட தொழில் முயற்சிக்கடனாக இரண்டு மில்லியன் ரூபா வழங்கும் நிகழ்வு மானிப்பாயில் அமைந்துள்ள யாழ் வர்த்தகதொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.. முதல் கட்ட கடன் உதவி யுவதி ஒருவருக்கு வழங்கப்பட்டது.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வகை III வகைப்பாடசாலைகளான யா/ஆனைப்பந்தி மெ.மி.த்.க. பாடசாலை மற்றும் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயப்பாடசாலைகளில் பணி புரியும் அதிபர் சேவை வகுப்பு 3ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளில் மூன்று வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும். அத்துடன் மூன்று வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும். முன்பு விண்ணப்பித்தவர்களும் மீள விண்ணப்பிக்க முடியும் விண்ணப்பப் படிவங்களை நிர்வாகப் பிரிவில் பெற்று டிசம்பர் 05ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

# முல்லை கல்வி வலயத்திற்கு நிரந்தர கணக்காளர் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு நிரந்தர கணக்காளர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படாமையால் நிர்வாகம் சார் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வலயத்திற்கென தற்காலிகமாக நியமிக்கப்படும் கணக்காளர் 3 அல்லது 6 மாதங்களில் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார். இதனால் நிதி நிர்வாக செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இவ்வலயத்திற்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றிய கணக்காளர் இவ்வலயத்திற்கு நியமிக்கப்பட்ட போதிலும் அவர் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வலயத்திற்கு கணக்காளர் இல்லாமையால் பாடசாலைகளின் அபிவிருத்தி சார் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் பாடசாலை சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர். (04)



இலங்கை உட்பட தென்னாசியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின்பொருளியில் இயக்குநர் ஸ்ரீதர் வரியோவா மற்றும் கொழும்பு அமெரிக்க தூதரகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம். படம் கே. நந்தகுமார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

என் தனிப்பட்ட வாழ்வில் பிராமணரல்லாத எத்தனையோ மத்திய சாதியினர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகப் பேசியதைக் கேட்டுள்ளேன். அதாவது இவர்கள் ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து பின்னர் கடும் உழைப்பு மற்றும் பிற காரணிகளால் முன்னேறி மேற்தட்டை அடைந்தவர்கள். இன்று அவர்கள் தமக்கு கீழ் உள்ள சமூகத்தினர் இடஒதுக்கீடு பெறுவதை எதிர்க்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது இடஒதுக்கீடு எதிர்ப்பு விவகாரத்தில் பிராமணர்களுடன் உயர் மத்திய, மத்திய சாதிகளும் நிச்சயம் கைகோர்க்கிறார்கள் என்பது தான். மீண்டும் இந்த பிரச்சினையை பிராமணர் versus தாழ்த்தப்பட்டவர் என்று பார்த்தோமானால் நம்மை விட முட்டாள் வேறு யாரும் இருக்க முடியாது.

பிராந்திய அரசியலுக்கு நெருக்கடி வந்தபோது பெரியார் திராவிடவாதத்தை முன்னெடுத்தார். ஆனால் இப்போது வடநாட்டவர் – தென்னாட்டவர் என்கிற முரண் அரசியல் பிராந்திய சமூகங்களில் வளர்ச்சியால் மெல்ல மெல்ல சமகாலத் தேவையை இழந்து வருகிறது. அதனால்தான் இன்றைய தமிழ்தேசியவாதிகள் ஈழத்தமிழர் பிரச்சினையை முன்னெடுத்து அதைக்கொண்டு சாதி கடந்த ஒரு தமிழ்தேசிய சமூகத்தைக் கட்டமைக்க முயல்கிறார்கள். தமது எதிரிகளாக சிங்களவர்களையும் வடநாட்டினரையும் வெளிநாட்டு காங்கிரஸ் தலைவியையும் முன்வைக்கிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகளின் வெள்ளாள, இந்துத்துவ அரசியலைக் கேள்விக்குள்ளாக்கும் போது அவர்கள் "நம்மைப் பிரிக்கப் பார்க்கிறார்கள்" என கூச்சலிடுகிறார்கள். – **ஆர்.அபிலாஷ்**

கட்டாயச் சூழலில் தோன்றும் ஒற்றுமை உணர்வு கேள்விக்குரியதே. மற்றவர்களை மாட்ட வைத்து முதலில் எப்படி நாம் தப்பலாம் என்பதையே ஒவ்வொருவரும் முக்கியமாக நினைப்பார்கள். – **நிரபராதிகளின் காலம்**

நமக்கு நாம் அழாததென்னே? – **வளையாபதி**

இலங்கையிலும் புலம்பெயர் சூழலிலும் இருக்கும் தமிழர் தலைவர்களிடம் இனி வருங்காலத்தில் இந்தியாவிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதில் தெளிவு வேண்டும். இந்தியாவின் ஆதரவு தேவையா இல்லையா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். தேவையில்லை என முடிவு செய்யப் பல காரணங்கள் உள்ளன. தனித்துவமான ஒரு மக்கள் போராட்டம், வன்முறை தவிர்த்த போராட்டம் சாத்தியமாக இருக்கலாம். இந்தியாவின் ஆதரவு தேவை என முடிவு செய்தால் இலங்கையின் தமிழர் உரிமைக்கான கோரிக்கை இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு எதிரானது அல்ல என்பது அகில இந்திய தலைமைக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். தனித் தமிழ்நாடு போராட்டம் இங்கு ஏற்பட்டால் அது தேவையற்ற வன்முறைகளுக்கு வழிவகுத்து பெரும் துயரத்திற்கு வழிகோலும் என்பது என் பார்வை. இதன் விளைவாகத் தென்மண்டலத்தில் இன சுத்திகரிப்பு நடப்பதை யாராலும் தடுக்க முடியாது. அத்தோடு அத்தகைய ஒரு பிரிவை அவசியமாக்கும் சமூக நெருக்கடிகள் இன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதில் கருத்து மாறுபாடு உள்ளவர்களுக்குத் தனித்தமிழ் நாட்டிற்காகப் போராடும் உரிமை உண்டு. இதை ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தோடு குழப்ப வேண்டியதில்லை.

தனி ஈழத்தின் இந்திய ஆதரவாளர்களிடம் நாஜிகளைப் போலக் கத்துவதையும் உடலை முறுக்குவதையும் தவிர்க்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்வது நன்மை பயக்கும்.

இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஊடகங்களுக்கு ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி சரியான புரிதல் இல்லை என்பது மட்டுமல்ல பல சமயங்களில் அபத்தமான புரிதல்கள் உள்ளன. இவை தொடர் உரையாடல்கள்வழி நீக்கப்பட வேண்டும். சுயநிர்ணயப் போராட்டத்திற்கான வழிமுறையாகப் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பயன்படுத்திய கடந்த கால நடைமுறைகளிலிருந்து முழுமையாகத் தம்மைத் துண்டித்துக்கொள்வது அவசியம். பயங்கரவாத நடவடிக்கைகளை உள்ளடக்கிய போராட்டம் இனி உலக ஆதரவைப் பெறும் எந்தச் சாத்தியப்பாடும் இல்லை.

– **காலச்சுவடு கண்ணன்**

ஈர அன்பினர் யாதுங் குறைவிலார் – **சேக்கிழார்**

தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே – **வள்ளலார்**

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை அடுத்த வருடம் முதல் செயற்படும்



(கொழும்பு)

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை, அடுத்த வருடம் நடுப்பகுதியிலிருந்து இயக்குவதற்கு துரித நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன்போது கடந்த கால யுத்தத்தால் முற்றாக அழிவடைந்த அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்திய அரசின் நிதியுதவியுடன் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதன்பிரகாரம் உட்கட்டுமான ஆரம்பக்கட்டப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய புனரமைப்புப் பணிகளை அடுத்தாண்டு ஜனவரி மாதத்திலிருந்து யூன் மாதத்திற்குள் நிறைவு செய்வதற்கான பணிகளைத் துரிதப்படுத்தி, கைத்தொழில் பேட்டையை விரைவில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கையினை முன்னெடுக்குமாறும் அதிகாரிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

இவ்வாறாக அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை புனரமைக்கப்பட்டு இயங்கும் பட்சத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், இந்திய உயர்ஸ்தானிகராலய பொருளாதாரத்துக்கான பேரவை உறுப்பினர்கள், யு.என்.ஒ பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள், திறைசேரியின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் விலையை கட்டுப்படுத்த இயலாது

## என்கிறது ஐலன்ட்

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களின் அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாது என்று ஐலன்ட் செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் பாரிய நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றன. இந்தநிலையில் அவற்றை ஈடுகட்டுவதற்காக எரிபொருள், மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஐலன்ட் குறிப்பிட்டுள்ளது.

மாற்றாக அரசாங்கமும் நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஐலன்ட் கோரியுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றின் அடிப்படையில், பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை, போக்குவரத்துச் சபை, மிஹின்லங்கா ஆகியவை பாரிய நட்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

இந்தநிலையில் கடந்த 35 வருடங்களாக வெளிநாட்டு கடன்களை பெற்று அதன் மூலம இலங்கையில் அரசியலை மேற்கொள்ளும் நடவடிக்கையே இடம்பெற்று வருகிறது.

எனினும் இது தவிர்க்கப்பட வேண்டும்.

பணவீக்கத்தை கட் டுப்படுத்தும் வழிவகைகள் உள்நாட்டிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஐலன்ட் வலியுறுத்தியுள்ளது.

# தொற்றாத நோய்களால் அதிகரித்துள்ள உயிரிழப்பு


(யாழ்ப்பாணம்)

தொற்றுநோய் அல்லாத நோய்களினால் இறப்புக்கள் அதிகரிப்பதாக புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார் தெரிவித்தார்.

மருத்துவ சங்கத்தின் மாநாடு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்று நோய்விடுதியில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது.

நீரிழிவு நோய் உட்பட தொற்றாத நோய்களினால் தற்போது இறப்புக்கள் அதிகமாக ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த மாநாடு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நோய் வருமுன் காப்பது" என்னும் தொனிப்பொருளில் 71 ஆவது வருட மருத்துவ சங்கத்தின் மாநாடு நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. 1941ஆம் ஆண்டில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ சங்கமானது, சமாதான காலத்தின் பின்பு தனது 71ஆவது வருட நிறைவை வெகு விமர்சையாக கொண்டாடவுள்ளது.



இந்த மாநாட்டில் 61 வைத்தியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இங்கு நோய்கள் மற்றும் வாழ்க்கை முறைமை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. சிரேஷ்ட வைத்தியர்களால் கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன" என்றார்.

# வரியிறுப்பு செயற்பாட்டை முன்னெடுக்க கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா நகர வரியிறுப்பாளர்களுக்கும் மன்னார் பிரஜைகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் வரியிறுப்பாளர் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான முதற்கட்டமாக சிறந்த முறையில் செயற்பட்டு வரும் வவுனியா வரியிறுப்பாளர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது என வவுனியா வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர், உபதலைவர் உட்பட மூவர் கலந்து கொண்டதுடன் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் சார்பில் தலைவர், செயலாளர் உட்பட உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்

# பிரதம நீதியரசர் விவகாரம் தந்தை ஆதரவு, தனயன் எதிர்ப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு முன்னின்று கையொப்பம் இட்டுள்ளார். பிரதியமைச்சர் முஸ்தபா ஆனால் அவரின் தந்தை யார் பிரதம நீதியரசருக்கு ஆதரவை வெளியிட்டுள்ளார்.

பிரதியமைச்சர் பைசர் முஸ்பதாவின் தந்தையாரான பாயிஸ் முஸ்தபாவே பிரதம நீதியரசருக்கு தனது ஆதரவை வெளியிட்டுள்ளார். பிரதமநீதியரசரை சந்தித்த பாயிஸ் முஸ்தபா, அவருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை சிலவேளையில் திரும்பப்பெறப்படலாம் என்று குறிப்பிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு உதாரணமாக முன்னாள் பிரதமநீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணை திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டமையை பாயிஸ் முஸ்தபா சுட்டிக்காட்டியுள்ளார்.

த்மது தந்தையார் பிரதமநீதியரசரக்கு ஆத ரவு வழங்குவதை கேள்விப்பட்ட பிரதியம்ச்சர் பைசர் முஸ்தபா, கவலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் துப்புரவாகும் கழிவு நீர் வாய்க்கால்கள்



(மன்னார்)

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பைகூழங்களுடன் காணப்படுகின்ற கழிவுநீர் வாய்க்கால்களை சுத்தம் செய்யும் துரித வேலைத் திட்டத்தை மன்னார் நகரசபை தற்போது முன்னெடுத்துள்ளது.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற கழிவுநீர் வாய்க்கால்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாதுள்ளது.

இந்த வாய்க்கால்களினுள் குப்பைகூழங்கள் கொட்டப்படுகின்றன. இதனால் வாய்க்கால்களிலிருந்து கழிவுநீர் செல்லமுடியாது அடைப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்தும் இந்த வாய்க்கால்களிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றன.

இதனால் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையில், மன்னார் நகரசபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் இந்த வாய்க்கால்களை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாக மன்னார் நகரசபையின் உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

# பிரதமநீதியரசரை சர்வாதிகாரமாக நடத்த வழிவகுத்துள்ள நீதிமுறை


## அமைச்சர் அத்தாவுட தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கையில் காணப்படும் நீதி முறைமையின் கட்டமைப்பு, பிரதம நீதியரசர் சர்வாதிகாரமாக நடந்துகொள்ள வழிவகுத்திருக்கின்றது என சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இன்றைய நீதித்துறை பிரதம நீதியரசரினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. அவரிடம் நீதிச்சேவை ஆணைக்குழுவை கட்டுப்படுத்தும் அதிகாரமும் உள்ளது. தான் விரும்பியவாறு நீதிபதிகளை நியமிக்கவும் அவருக்கு அதிகாரம் உள்ளது என அமைச்சர் கூறினார். பிரதம நீதியரசர், தனக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் நீதியரசர்களிடம் நேரிடையாக செல்வாக்கு பிரயோகித்திருப்பதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினார். இப்பிரதம நீதியரசர் நன்னெறியைக் கடைப்பிடிப்பவராயின் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் கூறினார்.


பின்வரும் வினாக்களுக்காகத் தரப்பட்டுள்ள குறியீட்டு விபரங்களைக் கவனித்து தரப்பட்டுள்ள குறியீட்டு உருக்கள் குறிக்கும் செய்தியை எழுதுக.



– நிலையத்தில்
– அப்பாவுடன்
– ஒன்று
– நின்றேன்



– வந்தது
– நான்
– ஏறினேன்
– பஸ்




43. ..............................

44. ..............................


45. ..............................

## பொது உளச்சார்பு பயிற்சி


முதல் உருவுக்கு சமமான உருவைத் தெரிவு செய்க

01. 


(1) (2) (3)

02. 

(1) (2) (3)

03. 

(1) (2) (3)

04. 

(1) (2) (3)




தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
பகுதி - I
1.30 மணி



# கல்வி முரசு

வெளியீடு 15

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



01. 



1.  2.  3. 

02. குடைகள் கறுப்பு நிறத்துணிகளால் ஆக்கப்பட்டிருப்பதன் காரணம்
   1. கறுப்பு நிறம் சூரிய ஒளியை உறிஞ்சும்
   2. கறுப்பு நிறம் குளிர்மையானது
   3. கறுப்பு துக்கத்தைக் குறிப்பதால்

03. துருப்பிடித்தல், தகனம், சுவாசம் மூன்றிற்கும் பயன்படும் வாயு
   1. ஐதரசன் 2. ஒட்சிசன் 3. காபனீரொட்சைட்

04. 60 $Kmh^{-1}$ கதியில் செல்லும் புகையிரம் ஒன்று அதே திசையில் 6 $Kmh^{-1}$ கதியில் நடந்து செல்லும் வழிப்போக்கர் ஒருவரை 10 செக்கனில் கடந்து செல்கின்றது இப்புகையிரதத்தின் நீளம் யாது?
   1. 150 m 2. 120 m 3. 130 m


05. ஒவ்வொரு உருவிலும் முழு உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.




   1. $\frac{1}{4}, \frac{1}{3}, \frac{1}{4}$ 2. $\frac{1}{8}, \frac{1}{8}, \frac{1}{4}$ 3. $\frac{1}{4}, \frac{1}{8}, \frac{1}{4}$

06. ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது?
   1. தெற்கு 2. தென்மேற்கு 3. கிழக்கு

07. ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோக்கிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோகிராம் ஆகும் எனின் சுரேஸின் நிறை யாது?
   1. 15 கிலோகிராம் 2. 68 கிலோகிராம் 3. 23 கிலோகிராம்

08. 
இவ் மணிக்கூட்டில் காட்டும் நேரத்தை தளவாடி ஒன்றினூடாகப் பார்க்கும்போது காட்டும் நேரம் யாது?
   1. 9 மணி 2. 3 மணி 3. 12 மணி 15 நிமிடம்


09. இவ்வென்னுருவில் மூன்று விளையாட்டிலும் பங்கு பற்றியவர்களைக் குறித்து நிற்கும் இடத்தை நிறம் தீட்டிக் காட்டுக.




**சுருக்கமான விடை தருக.**

10. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................
11. தாவர உண்ணிகள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................
12. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
1) ............................ 2) ............................
13. தோற்கருவிகள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................
14. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................
15. பூரணமான உணவுகள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................
16. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
1) ............................ 2) ............................

17. கொடுக்கப்பட்ட இருப்பிடம்.
1. விடாமுயற்சியைக் குறிப்பது
2. களவாகப் பிறர் பொருளைப் பயன்படுத்துவது
3. குச்சிகளால் ஆக்கப்பட்டது.



18. கொடுக்கப்பட்ட படத்திற்குப் பொருத்தமான வாக்கியம்
1. வீரியமானதும், கொடியதும்
2. நீரிலும் நிலத்திலும் வாழ்வது
3. நச்சுத் தன்மையுடையதும் சிறு பிராணிகளை உண்ணுவதும்



**நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

19. வயல்
............................
20. மாடுகள்
............................
21. கலப்பை
............................



**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)

22. இலங்கையில் மிக நீளமான ஆறு............................கங்கை ஆகும்.
23. நீர்மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலுநிலையம்............................ஆகும்.
24. மிக உயரமான நீர்வீழ்ச்சி............................நீர்வீழ்ச்சி ஆகும்.
25. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப்பெறாதது............................ஆகும்.
26. மகாவலி கங்கை உற்பத்தியாவது............................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

**சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.**

27. இலங்கையின் தேசிய மரம் நாகமரம் ஆகும். ( )
28. இலங்கையில் மிக நீளமான நதி மகாவலி கங்கை ஆகும். ( )
29. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நோர்வே ஆகும். ( )

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

30. புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது புகைவண்டி நிலையத்தில் பெறவேண்டியது, (நுழைவுச்சீட்டு / பிரயாணச் சீட்டு)
31. ஒரு கடிதத்தை அனுப்புவதற்குத் தபாலகத்தில் பெறவேண்டியது (முத்திரை / காசோலை)
32. வங்கியில் பணம் பெறுவதற்குக் கொடுக்க வேண்டியது (குடும்ப அட்டை / காசோலை)
33. பஸ் நிலையத்தில் இறங்குவதற்குச் செய்ய வேண்டியது (சத்தமிடுதல் / மணி அடித்தல்)

**அடைப்பினுள் இருந்து சரியான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.**


34. (வழி, வளி, வலி) அஞ்சாமல் தனி............................யே போகவேண்டாம்.
35. (வாழை, வாளை, வாலை) கடலில் ............................மீன்கள் காணப்படும்.
36. (குழவி, குல்வி, குளவி) கல்லால் எறிந்ததும் ............................கூட்டிலிருந்து புறப்பட்டது.
37. (உழவு, உளவு, உலவு) ஒற்றன் ............................அறிய பகையரசனின் நாட்டிற்குச் சென்றான்.
38. (கழகம், களகம், கலகம்) நாட்டில்............................ ஏற்பட்டதால் மக்கள் வெளியேறினர்.

**எதிர்ப்பாற் சொல் தருக**

39. இடையன் ............................
40. அழகன் ............................
41. இளையவன் ............................
42. பாகன் ............................

# விமானநிலையம் புனரமைப்பு இந்திய ஒப்பந்தம் இரத்து

## மாலைதீவு அரசு அதிரடி



மாலேயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட இந்திய நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்து சிறிய நாடான. மாலைதீவு இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது. இந்திய பெருங்கடலில், இந்தியாவுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள நாடு மாலைதீவுகள். பூகோள ரீதியாக இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமான நாடாகவும் ஒரு காலத்தில் இருந்தது மாலைதீவுகள்.

கடந்த 1988ஆம் ஆண்டு மாலைதீவுகளில் நடந்த புரட்சியை இந்திய கடற்படை வெற்றிகரமாக தடுத்து, அதிபர் முகமது அப்துல் கயூம் அரசை காப்பாற்றியது குறிப்பிடத்தக்கது. தற்போது அங்கு நிலைமை தலைகீழ்.

கடந்த 2010ஆம் ஆண்டு மாலைதீவுகளின் தலைநகர் மாலேவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக விடப்பட்ட 511 மில்லியன் அமெரிக்க டொலர் கேள்விப்பத்திரத்தை இந்திய நிறுவனமான ஜி.எம்.ஆர்., நிறுவனம் எடுத்திருந்தது. அப்போது மாலைதீவுகள் அதிபராக நசீத் இருந்தார். அங்கு தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தற்போது முகமது வகீத் தலைமையிலான அரசு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில், முந்தைய நசீத் ஆட்சியில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை இரத்து செய்யும் பணியில் வகீத் தலைமையிலான அரசு செயற்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஜி.எம்.ஆர்., நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மாலே சர்வதேச விமான நிலைய மேம்பாட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்துள்ளது மாலைதீவுகள். இதுகுறித்து அதிபரின் செய்தித்தொடர்பாளர் இமாத் மசூத் கூறுகையில், அதிபரின் பரிந்துரையின் பேரில் இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதாகவும், இது முறையான ஒப்பந்தம் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுகளின் இந்த நடவடிக்கை இந்தியாவை அதிருப்தியிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள இந்தியா, மாலைதீவுகளில் உள்ள இந்தியர்கள், இந்திய நிறுவனங்கள் மற்றும் அதன் சொத்துக்களை பாதுகாப்பதில் இந்தியா உறுதியாக உள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும், மாலைதீவுகளின் இந்த நடவடிக்கை அந்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு முதலீடு மற்றும் சர்வதேச சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள தவறான சமிக்ஞை என்று கூறியுள்ளது

# இந்தியா- ரஷ்யா இடையே இராணுவ கூட்டுப் பயிற்சி

இந்திய, ரஷ்ய கப்பல் படையினர் டிசம்பர் 2ஆம் திகதி முதல் இரண்டு நாட்கள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட உள்ளனர்.

இந்திரா என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கூட்டு பயிற்சியில் இந்தியாவின் போர்க்கப்பல்களான ஐ.என்.எஸ்.மைசூர் உள்ளிட்டவை பங்கேற்க உள்ளன.

ரஷ்யா சார்பில் மூன்று போர்க்கப்பல்கள் கலந்து கொள்கின்றன.

அமெரிக்கா - ரஷ்யா இடையே பனிப்போர் நிலவினாலும் இந்தியா இந்த இரண்டு நாடுகளுக்கும் நட்புறவாகவே செயற்படுகிறது.

இந்தியாவின் அணுமின் திட்டங்களில் பெரும் பங்கீட்டில் ரஷ்யா உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தனித்துப் போட்டியிட்டு 15 தொகுதிகளில் வெற்றி

## நம்பிக்கை கொடுக்கும் பா.ம.க




லோக்சபா தேர்தலில், பா.ம.க., தனித்து போட்டியிட்டு, 15 இடங்களில் வெற்றி பெறும், என, அக்கட்சியின் தலைவர் ஜி.கே.மணி கூறினார். மதுரையில், அவர் கூறியதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து, தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த வேண்டும். உயர்க் கல்வியில், மத்திய அரசு கொண்டு வந்துள்ள நுழைவுத் தேர்வை இரத்து செய்ய வேண்டும். வரலாறு காணாத மின் வெட்டை சமாளிக்க, மத்திய அரசுடன் தமிழக அரசு பேச்சு வார்த்தை நடத்தி, வெளிமாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்க வேண்டும். மாவட்டந்தோறும் மின்வெட்டை முறைப்படுத்த வேண்டும். லோக்சபா தேர்தலில் பா.ம.க., தனித்து போட்டியிட்டு, 15 இடங்களில் வெற்றி பெறும், என்றார்.

# தொலைபேசி ஒட்டுக்கேட்பை குறைத்தது புலனாய்வுப் பிரிவு

## இ-மெயில் கண்காணிப்பு அதிகரிப்பு!



உளவுப் பிரிவினரின் வேண்டுகோளின் படி, மேற்கொள்ளப்படும், இ-மெயில் கண்காணிப்பு, கடந்த செப்டம்பரில், 36 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரம், தொலைபேசி ஒட்டுகேட்பது குறைந்துள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு போன்ற காரணங்களால், உளவுப் பிரிவினர் கேட்டுக் கொள்வதன் அடிப்படையில், சந்தேகத்திற்கு இடமானவர்களின், இ-மெயில் கண்காணிக்கப்படுகின்றன.

யாருடைய இ-மெயில் கண்காணிக்கப்பட வேண்டும் யாருடைய தொலைபேசி ஒட்டு கேட்கப்பட வேண்டும் என்பதற்கான பட்டியலை, இதற்காக அமைக்கப்பட்டுள்ள, உயர்மட்ட குழுவிடம், உளவு அமைப்புகள் வழங்கும்.கண்காணிப்பு மற்றும் ஒட்டு கேட்பதற்கான உத்தரவு வழங்கும், உயர்மட்ட குழுவில், கேபினட் செயலர், அஜித் சேத், டெலிகாம் செயலர், சந்திரசேகர் மற்றும் சட்டத்துறை செயலர், பி.ஏ.அகர்வால் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, தங்களுக்குக் கிடைக்கும் வேண்டுகோள் கடிதங்களை ஆராய்ந்து, அதன் உண்மை தன்மையை அறிந்து, கண்காணிக்க உத்தரவிடும். சில சமயங்களில், உளவு பிரிவினரின் வேண்டுகோள் நிராகரிக்கப்படலாம். ஒகஸ்டில், 1,174, இ-மெயில்கள் கண்காணிக்கப்பட்டன. இது, செப்டம்பரில், 36 சதவீதம் அதிகரித்து, 1,661, இ-மெயில்களாக உயர்ந்துள்ளன.

அதுபோல, ஒகஸ்டில், 10 ஆயிரத்து 648 தொலைபேசிகளின் உரையாடல்கள் கண்காணிக்கப்பட்டன. அது, செப்டம்பரில், 10 ஆயிரத்து 490 ஆக குறைந்துவிட்டது. தொலைபேசி ஒட்டுக் கேட்புக் கோரி விண்ணப்பிக்கும், உளவு நிறுவனங்களில், ஐ.பி., அமைப்பு தான் முன்னணியில் உள்ளது. அடுத்த இடத்தை, வருவாய் புலனாய்வு அமைப்பும், அதற்கு அடுத்த இடத்தை, அமுலாக்க இயக்குனரகமும் விண்ணப்பித்துள்ளன. இராணுவ சிக்னல் உளவுப் பிரிவினரும், கண்காணிப்பு மற்றும் ஒட்டுகேட்புக்கு விண்ணப்பிப்பது உண்டு

# நாலடியார் பாடல்களை ஒப்புவிக்கும் மாணவன்

(புதுச்சேரி)



புதுச்சேரியில், அரசுப் பள்ளியைச் சேர்ந்த 5ஆம் வகுப்பு மாணவன் மு.பிரகதீஸ்வரன் நாலடியாரில் உள்ள 400 பாடல்களையும் பொருளுடன் மனப்பாடமாகச் சொல்கிறார்.

பெத்துசெட்டிப்பேட்டை என்ற ஊரைச் சேர்ந்த சு.முருகன்-மு.கீர்த்திகா தம்பதியின் மகன் மு.பிரகதீஸ்வரன்.

இவர் அதே பகுதியில் உள்ள அரசு புத்தொளிர் பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

இவரது தந்தை முருகன், மளிகை கடையில் தினக் கூலி தொழிலாளராக வேலை செய்கிறார்.

பிரகதீஸ்வரன் ஏற்கனவே திருக்குறளில் உள்ள 1330 பாடல்களையும் மனப்பாடமாக பொருளுடன் சொல்லி சாதனை படைத்துள்ளார்.

எந்தக் குறளை கேட்டாலும் அதற்கு உரிய விளக்கத்தையும் தயங்காமல் சொல்வார்.

மேலும் திருக்குறளில் உள்ள சிறப்புகள், எவைப் பற்றியெல்லாம் பாடப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக விளக்கத்துடன் கூறுகிறார்.

இவர் தற்போது நாலடியாரில் உள்ள 400 பாடல்களையும் பொருள் விளக்கத்துடன், மனப்பாடமாக கூறுகிறார்.

இவரிடம், பாடலின் எண்ணைக் கூறினாலே போதும், அப்பாடலுடன் விளக்கமும் சொல்கிறார்.

கடந்த 6 மாதங்களில் இந்த நாலடியார் பாடல் மற்றும் அதன் விளக்கங்களை படித்து முடித்துள்ளதாக கூறுகிறார் பிரகதீஸ்வரன்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................................

முகவரி : ..............................................

பிறந்த ஆண்டு : ..............................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## எல்.ரி.ரி.ஈ...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதிலாக, பிரபாகரனிடம் அவர் அவரது சொந்த விருப்பத்தில் மட்டுமே செயற்படுகிறார் என்பதை அவருக்கு தெளிவாக விளக்கியிருந்தால் அது சிலவேளைகளில் அவரை மீண்டும் சிந்திக்கத் தூண்டியிருக்கும், உள்ளக ஆய்வுக் குழுவின் அறிக்கை, ஐ.நா. இலங்கைப் படைகள் மீதான அழுத்தத்தை அதிகரித்திருக்க வேண்டும் என பிரேரித்துள்ளது. இலங்கை அரசாங்கம் போர்க்குற்றம் புரிகிறது என்பதை கடுமையான எச்சரிக்கை மூலம் ஐ.நா. அதனிடம் வலியுறுத்தியிருக்க வேண்டும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இது உயிர்களைக் காப்பாற்றியிருக்கும் என்று அது சொல்கிறது. ஆனால் எப்படி? சநதேகமில்லாமல் கோடன் வைஸைப் போன்றவர்கள் தாங்கள் அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என உணருவார்கள்தான். ஆனால் அது உண்மையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்?

அழுத்தம் என்பது சரியான திசையில் பிரயோகித்தால் மட்டுமே பயன் தரும். சர்வதேச சமூகம் செய்தது என்னவென்றால், ஒரு தலைமுறை நீண்ட மோதலை தாங்கள் முடிவுக்கு கொண்டு வருவதை மேற்கு முயற்சி செய்து நிறுத்தி விடுமோ என்று இலங்கைப் படைகள் யோசிப்பதற்கான பல காரணங்களை முன்வைத்தது மட்டுமே.

# செவ்வாய் கிரகத்தில் 80 ஆயிரம் பேர்
# அடுத்த 20 ஆண்டில் குடியேற்றம்



செவ்வாய்க்கிரகத்தில் விரைவில் குடியேற்றம் நிகழும் என்றும் அடுத்த 20 ஆண்டுகளில் 80 ஆயிரம் பேர் அங்கு குடியேறத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி எலான் மஸ்க் அறிவித்துள்ளார். பூமியை சுற்றிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு முதன் முறையாக பொருளகளை விண்கலத்தில் ஏற்றிச் சென்று சாதனை படைத்தது இந்த ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம்.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்துக்கு ஆட்களை ஏற்றிச் செல்லும் திட்டம் குறித்து அறிவிப்பை வெளியிட்டுள்ளது ஸ்பேஸ்எக்ஸ்.இது தொடர்பாக லண்டனில் உள்ள ரோயல் ஏரோநாட்டிக்கல் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எலான் மஸ்க் கூறியதாவது:-

முதற்கட்டமாக 10 பேரை மட்டும் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளோம். பின்னர் படிப்படியாக அதிக அளவிலானோர் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான கட்டணம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என நிர்ணயித்துள்ளோம். முன்னேறிய நாடுகளில் உள்ள நடுத்தர வயதினர் அதிகளவில் இப்பயணத்துக்கு முன்வர வேண்டும் என்பதற்காக கட்டணத்தை குறைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

செவ்வாய் கிரகத்தில் செங்குத்தாக தரையிறங்கக் கூடிய விண்கலங்களை தயாரிக்க வேண்டியுள்ளது. அதோடு விண்கலங்களை மீண்டும் மீண்டும் பயணத்துக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த வசதிகளுடன் "பாலகன்-9" விண்கலத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். செவ்வாய் கிரகத்தில் முதலில் குடியேறுவோர் தாங்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

சூரிய ஒளி தாக்காத வகையில் குடியிருப்புகளை ஏற்படுத்துதல், பிராணவாயுவை செயற்கையாக உருவாக்கும் கருவிகளை நிறுவுதல் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளை தேடிக்கண்டறிந்து குடிநீராகப் பயன்படுத்த முயற்சித்தல் உள்ளிட்ட பணிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து ஈடுபட வேண்டியிருக்கும். செவ்வாய் மண்ணில் பயிர் சாகுபடி செய்வதற்கான சாத்தியக் கூறுகளும் ஆராயப்படும். அங்கு குடியேறுவோர், சுயசார்புள்ள புதிய நாகரிகத்தை உருவாக்குவார்கள். அடுத்த 20 ஆண்டுகளுக்குள் செவ்வாயில் 80 ஆயிரம் பேரை• குடியேற்றத் திட்டமிட்டுள்ளோம் என்றார் எலான் மஸ்க்

# சீனாவில் வேகமாக பரவுகிறது எயிட்ஸ்



சீனாவில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்திருப்பதாக உத்தியோகபூர்வ புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.


கடந்த ஆண்டில் புதிதாக இந்த நோய் வந்தவர்கள் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளிலிருந்து பதிமூன்று சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்றும், சீனாவில் இந்தப் பாதிப்பு வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 5 இலட்சம் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவித்ததை அடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மேம்பட்ட பராமரிப்பும் சிகிச்சைகளும் வழங்கப்படும் என அரசாங்க அதிகாரிகள் வாக்குறுதி அளித்துள்ளனர்.

எயிட்ஸ் கட்டுப்பாடு தொடர்பில் அரசுசாரா நிறுவனங்கள் கூடுதல் பங்களிப்பு ஆற்ற அனுமதிக்கப்படுவார்கள் என நாட்டின் பிரதமராக வரவுள்ள லி கெகியாங் வாக்குறுதி அளித்துள்ளார்.எயிட்ஸ் நோயாளிகளுடன் கெகியாங் கைகுலுக்குவதைக் காட்டும் காட்சிகள் அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

எயிட்ஸ் நோயாளிகள் தொடர்ச்சியாக ஒதுக்கப்படுவதாக முறைப்பாடுகள் வந்துள்ள சீனாவில் உயரதிகாரி ஒருவர் எய்ட்ஸ் நோயாளிகளுடன் கைகுலுக்குவதென்பது அரிதாக நடக்கின்ற ஒரு விடயம் எனலாம்.

உலகச் செய்திகள்

# உலகில் கவர்ச்சியான மனிதர் வடகொரியாவின் அதிபராம்
## – கூறுகிறது சீன நாளிதழ்



உருண்டை முகத்துடன் இருக்கும் வடகொரியாவின் இளம் தலைவர் கிம் ஜாங்தான் உலகிலேயே செக்சியான மனிதர் என்று சீனாவின் பீப்பிள்ஸ் டெய்லி நாளிதழ் குசும்பு செய்தி வெளியிட்டிருக்கிறது.

சும்மா காத்து வாக்கில் வரும் செய்திகள், அரசல் புரசல் தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படும் தகவல்களுக்கு கண்,காது, மூக்கு வைத்து சுவாரஸ்யமாக கூறும் செய்திகளை ஓனியன் என்கிறார்கள். உரித்துப் பார்த்தால் ஒன்றும் இருக்காது என்பதால் இந்தப் பெயர். அமெரிக்காவில் தி ஓனியன் என்ற பெயரில் நாளிதழும் இணையத்தளமும் செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வடகொரிய தலைவர் கிம்ஜாங்யுன்ஐ தி ஓனியன் மீடியா நிறுவனம் இந்த ஆண்டின் செக்சியான மனிதர் என்று அறிவித்திருப்பதாக சீனாவின் தி பீப்பிள்ஸ் டெய்லி நாளிதழ் குசும்பு செய்தி வெளியிட்டுள்ளது. இளமையானவர், அழகானவர், உருண்டை முகம் கொண்டவர், துடிப்பானவர், உறுதியானவர்.. என எல்லாப் பெண்களின் மனம் கவர்ந்த நாயகனாக கிம்ஜாங் விளங்குகிறார் என்று கமெண்ட்டும் அடித்திருக்கிறது. தனது இணையத்தளத்தில் 55 பக்கங்களுக்கு கிம்ஜாங்கின் விதவிதமான படங்களையும் வெளியிட்டிருக்கிறது.

நிஜமாகவே, கிம்ஜாங்குக்கு இப்படியொரு பட்டத்தை தி ஓனியன் மீடியா நிறுவனம் வழங்கியதா என்பது பற்றி தகவல் இல்லை. இதுபற்றி பீப்பிள்ஸ் டெய்லி செய்தியாளர்களை தொடர்பு கொள்ளவும் முடியவில்லை என்று செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. சீனாவில் கம்யூனிஸ்ட் அரசு நடத்தும் பத்திரிகையில் குசும்பு செய்தி வருவது இது முதல் முறை அல்ல. அமெரிக்க நாடாளுமன்ற வோஷிங்டனில் இருந்து இடம் மாற்றப் போகிறார்கள். வேறு இடம் பார்த்து வருகிறார்கள் என்று சீன அரசு ந[illegible]தும் பீஜிங் ஈவ்னிங் நியூஸ் இதழில் 2002ஆம் ஆண்டு பரபரப்பான பொய்ச் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை முதன்முதல் செய்த மருத்துவர் மரணம்

(வோஷிங்டன்)

உலகில் முதன்முதலாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்தவரும், நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் ஜோசப் முர்ரே காலமானார். அவருக்கு (வயது- 93).

அமெரிக்காவின் புகழ்பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணராக இருந்தவர் டாக்டர் ஜோசப் முர்ரே. அவர் கடந்த 1954ஆம் ஆண்டு சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சையை வெற்றிகரமாக செய்தார். இதன மூலம் உலகிலேயே முதன் முதலாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர் என்ற பெருமையைப் பெற்றார். மேலும் அவர் பல்வேறு மருத்துவ ஆராய்ச்சிகள் மற்றும் உடற்கூறு குறித்த ஆய்வுகள் நடத்தினார். மருத்துவ உலகில் அவரது சாதனையைப் பாராட்டும் வகையில் அவருக்கு கடந்த 1990ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பாஸ்டனில் வசித்து வந்த ஜோசப்புக்கு கடந்த வியாழக்கிழமை அன்று வாதம் அடித்தது. இதையடுத்து அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி கடந்த திங்கட்கிழமை இறந்தார்.

அவர் அறிமுகப்படுத்திய சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையால் இன்று உலகம் முழுவதும் 6 இலட்சத்திற்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர்.

# முஹம்மது நபியை இழிவுபடுத்தும் படம் எடுத்த எழுவருக்கு மரண தண்டனை




முஸ்லீம்களின் இறுதி தூதரான முஹம்மது நபியை இழிவுபடுத்தும் வகையில், இனசன்ஸ் ஒப் முஸ்லிம் என ஓர் திரைப்படம் இணையதளத்தில் வெளியிடப்பட்டதும், அதை எதிர்த்து உலகெங்கும் அமெரிக்காவுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றது. இப்படத்தை எடுத்த ஏழு பேர் மீதும் எகிப்தில் வழக்கு தொடரப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட ஏழு நபர்களும் எகிப்திற்கு வெளியே உள்ள நிலையில் இவ்வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி சைப் அல் நஸ்ர் இஸ்லாம் மற்றும் அதன் தூதரை அவமானப்படுத்தும் வகையில் குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேரும் படம் எடுத்துள்ளனர் என்பது உறுதியாகிறது என்று தீர்ப்பளித்துள்ளார்.

இப்படிப்பட்ட மோசமான படத்தை எடுத்து, இஸ்லாம் மார்க்கத்தையும் அதன் தூதரையும் இழிவுபடுத்தியதற்காக எகிப்து நாட்டைப் பொறுத்து தலைமறைவாக இருக்கும் ஏழு பேருக்கும் தூக்கு தண்டனை வழங்கப்படுவதாக நீதிபதி தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் அமெரிக்காவில் வசிக்கும் எகிப்திய கிறித்தவர்கள் என்பதும், ஏழு நபர்களில் ஒருவரான நகோலா பஸிலி தற்போழுது லாஸ் ஏஞ்சல்ஸில் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தண்டனை குறித்து எவ்வித கருத்தையும் அதிகாரபூர்வமாக தெரிவிக்க எகிப்தின் காப்டிக் ஆர்த்தோடெக்ஸ் தேவாலயம் மறுத்து விட்டது. இது குறித்து கருத்து தெரிவித்த தேவாலய அதிகாரி ஒருவர், இப்படம் குறித்து ஏற்கனவே தேவாலயம் தன் கண்டனத்தை தெரிவித்துள்ளது என்றும் பொதுவாக நீதிமன்றங்களின் தீர்ப்பு குறித்து தேவாலயம் கருத்து எதுவும் தெரிவிக்காது என்றும் கூறினார்.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் தாய்லாந்து பிரதமர் தப்பினார்



தாய்லாந்து பெண் பிரதமர் யெங்லக் ஷினவத்ரா, நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் தப்பித்தார். தாய்லாந்தில் கடந்த ஆண்டு நடந்த தேர்தலில், வர்த்தகப் பிரமுகர் யெங்லக் ஷினவத்ரா பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். ஆட்சியில் இருந்து [illegible]க்கப்பட்ட முன்னா[illegible] பிரதமர் தகஷின் ஷினவத்ராவின், சகோதரியாவார்.

தேர்தலில் யெங்லக்கின் புவா தாய் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காததால், 5 கட்சிகளுடன் சேர்ந்து அவர் ஆட்சி அமைத்தார். இந்நிலையில், தகஷின் ஷினவத்ராவின் தலையாட்டி பொம்மையாக பிரதமர் இருக்கிறார் என்றும், வெளிநாட்டில் இருந்து அரிசி வாங்கியதில் பெருமளவு முறைகேடு நடந்துள்ளதாகவும் கூறி, முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டு வந்தது.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் 3 நாட்களாக விவாதம் நடந்தது. தீர்மானம் மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் மொத்தம் உள்ள எம்.பி.க்கள் 467பேரில் 308 பேரின் ஆதரவு யெங் லக்குக்கு கிடைத்துள்ளதாக சபாநாயகர் சோம்சக் கியாட் சுரானோன்ட் அறிவித்தார். இதனால் அவரது தலைமையிலான கூட்டணி அரசு தப்பித்தது.

# சமச்சீரற்ற பாடசாலை அனுமதி; பெற்றோர்களின் உள்ளக்குமுறல்

பிரபல ஆரம்பப் பாடசாலையில் அதிகளவிலான பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதினால் கிராமப்புறங்களில் உள்ள பல ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களின் தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்து வருவதாகப் பல பெற்றோர்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது பிள்ளைகளை நகர்ப்புறத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதில் பல பெற்றோர்கள் முண்டியடித்துக் கொள்கின்றார்கள். தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் நல்ல புள்ளிகள் பெற்று சித்தியடைந்து தொடர்ந்து படிப்பதற்கு ஆறாம் வகுப்புக்கு மேலுள்ள பிரபல பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இருந்தும் சில கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளிலும் புலமைப் பரிசில் பெறுபேறுகள் சிறப்பாகவுள்ளன. ஆனால் இதனை எவரும் கருத்தில் கொள்வதாக இல்லை. பிரபல பாடசாலைகளில் பார்க்கும் போது முதலாம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டுவரை பல பாடசாலைகளில் மொத்தமாக நூற்றுக்கும் குறைவான மாணவர்களே காணப்படுகின்றனர்.

இந்த நடைமுறை இப்படியே சென்றுகொண்டிருந்தால் பிரபல பாடசாலைகளை தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் செல்ல இதர பாடசாலைகள் மாணவர்களின் தொகையில் வீழ்ச்சி கண்டு பின்னடைவை நோக்கிச் சென்று வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்கள் உண்டு என பல பெற்றோர்களினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(137)

## மேற்கிளம்பும் எலும்புக்கூடுகள்

மாத்தளை மாவட்ட வைத்தியசாலை வளவில் ஏற்கனவே மனித எலும்பு கூடுகள் அடங்கிய மனிதப் புதைக்குழி கண்டுப்பிடிக்கப்பட்ட இடத்தில் இருந்து மேலும் இரண்டு எலும்புக் கூடுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டு இராணுவத்தின் சித்திரவதை முகாம் ஒன்று குறித்த இடத்தில் இயங்கியதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியானதை அடுத்து, அந்த இடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எலும்பு கூடுகள் மீட்கப்பட்ட இடத்தில் பொலிஸாரின் விசேட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தற்போது மீட்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் மாத்தளை தலைமையக பொலிஸாரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 26 ஆம் திகதி மாத்தளை வைத்தியசாலையின் உயிர்வாயு பிரிவிற்காக குழி ஒன்றை தோண்டிய போது, உக்கி போன நிலையில், பல மனித எலும்பு கூடுகள் கிடைத்துள்ளதாக மாத்தறை தலைமையக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்ததை அடுத்து, மேலும் அந்தக் குழியில் மனித எலும்பு கூடுகள் இருக்கின்றவா என்பதை கண்டறிய அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாத்தளை மேலதிக நீதவான் உத்ரவிட்டதை அடுத்து, நேற்று முனதினம் முதல் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நேற்றைய தினம் வரை 06 மண்டையோடுகளுடன் எலும்புகள் மீட்கப்பட்டன.

### வதிவிட அனுமதிக்கு...

பேருக்குக்கும் 1997 ஆம் ஆண்டு 80 ஆயிரம் பேருக்கும் வதிவிட அனுமதி வழங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் (முன்னைய அரசு ஆட்சியின் போது) வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இரு வருடம் பிரான்ஸில் வாழ்ந்தால் பிள்ளைகள் ஒருவருடம் பாடசாலையில் கல்வி கற்றால் வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக்கையில் இந்த கால எல்லைகள் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

5வருடங்கள் பிரான்ஸில் வாழ்பவர்கள் கடைசி இருவருடங்களில் ஆகக்குறைந்தது 8 மாதங்கள் வேலை செய்திருந்தால் அலலது 5 வருடங்களில் மொத்தம் 30 மாதங்கள் வேலை செய்திருந்தால் அவர்களும் வதிவிட அனுமதிக்கு விண்ணபிக்க முடியும். 18 வயதிற்கு கீழ்ப் பட்டவர்கள் இரு வருடங்கள் பிரான்ஸில் வாழ்ந்திருந்தால் அவர்கள் அக்காலப் பகுதியில் பாடசாலையில் கல்வி கற்றிருந்தால், அவர்கள் பிரான்ஸ் சமூக கலாசாரத்துடன் இணையும ஆர்வம் கொண்டவர்களாக இருந்தால் அவர்களும் வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும். வதிவிட அனுமதி உள்ள ஒருவருடன திருமணம் முடிக்காது 18 மாதங்கள் ஒன்றாக வாழ்ந்தால் அவர்களும் வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய...

ஏந்தியவாறு கடற்றொழிலாளர்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்திய அரசே நலிவுற்ற எங்களை இழுவைப்படகுகளால் நசுக்காதே, இந்திய அரசே எமது கடல்வளத்தைச் சுரண்டாதே, உள்ளூர் இழுவைப் படகுகளுடன் இந்திய இழுவைப் படகுகளையும் தடுத்து நிறுத்து போன்ற சுலோகங்கள் இவற்றில் அடங்கியிருந்தது.

முன்னதாக ஆரம்பித்த பேரணி புனித ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய வீதியில் இருந்து நகர்ந்து மருதடி வீதிக்குச் சென்று அங்கு அமைந்திருக்கும் இந்தியத் தூதரக அலுவலகத்தை அடைந்தது. அங்கு இந்தியத் துணைத் தூதர் அலுவலகத்தைச் சூழ்ந்துநின்று கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிதுநேர போராட்டத்தின் பின்னர் கடற்றொழிலாளர்களது இந்திய அரசாங்கத்திற்கான மகஜரைக் கையளிப்பதற்காக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தலைமையில் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இந்தியத் துணைத் தூதரகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட் டனர்.

சுமார் 15 நிமிட சந்திப்பிற்குப் பின்னர் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்களது கோரிக்கை இந்திய அரசாங்கத்திற்கு அனுபபிவைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் உறுதியளித்ததாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலார்களிடம் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துக்கொண்டதனை அடுத்துப் பேரணி அதே வழியாகப் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தை அடைந்து அங்கிருந்து றக்கா வீதி வழியாக கச்சேரி நல்லூர் வீதியை அடைந்து யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.


யாழ். செயலக வாயிலில் ஒன்றுகூடியிருந்த கடற்றொழிலாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகளிடம் இருந்து மகஜரைப் பொறுப்பேற்பதற்காக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் செயலக வாயிலிற்கு வருகை தந்திருந்தார்.

மகஜரைக் கையேற்ற அவர் கடற்றொழிலாளர்களது கோரிக்கை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார். இதன்போது யாழ். மேலதிக அரச அதிபரிடம் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் சார்பில் தெரிவிக்கப்படுகையில் வரும் 15 நாட்களுக்குள் இருநாடுகளும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைப்படகுத் தொழில நடவடிக்கையைத் தடுக்காது விட்டால் அதன் பின்பு இலங்கை இந்திய மீனவர்கள் கடலில் மோதும் நிலை உருவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனுடன் பேரணி ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் நோக்கி நகர்ந்தது.

அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கான மகஜரை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலிடம் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கையளித்தனர். மகஜரைப் பொறுப்பேற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் க.கமல் கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதிக்கு உங்களது கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு அதற்கான தீர்வினைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், அமைச்சர் மீனவர் சமூகத்தின் பிரச்சினைகளில் கரிசனை கொண்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன் அமைதி வழியில் கடற்றொழிலாளர் சமூகம் இந்தப் பேரணியை நடத்தியதையிட்டு அவர்களுக்குத் தமது நன்றியையும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேரணியின் முடிவில் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வழத்திணைக்களத்தின் அலுவலகத்திற்குச் சென்ற கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் அங்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந. கணேசமூர்த்தியிடம் மகஜரின் பிரதியைக் கையளித்தனர். இதன்போது உள்ளூர் மீனவர்களது இழுவைப்படகுத் தொழிலைக் கட்டுப்படுத்தக் கடறறொழிலாளர்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்று கேட்டுக் கொணடார். அதற்கு கடற்றொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தருவதாக உறுதியளித்துள்ள னர்.(பா,இ)

## விசேட தேவை உடையவரகளுககு கை கொடுத்திருக்கிறார் புத்திக



மாத்தறை மாவட்ட விசேட தேவைகள் வேண்டியவர்களுக்கு அவர்களின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்வதற்காக சக்கர நாற்காலிகள், கைலாகுகள், உதைக்கால்கள், முச்சக்கர வண்டிகள், செவிமடு உபகரணங்கள், கண்வில்லைகள் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டமொன்று சமாதி அபிவிருத்தி மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இச்செயற்றிட்டத்திற்காக ஏதாவது ஒரு நன்கொடை வழங்க விரும்புவோருக்கு மற்றும் விசேட தேவைகள் வேண்டியவர்களுக்கு 0777306922, 0412230946 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்புகொள்ள முடியும். அக்குறெஸ்ஸ பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் விசேட தேவைகள் வேண்டியவர்களுக்கு மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினர் சமாதி மன்றத் தலைவர், முகாமைத்துவ அத்தியட்சகர் புத்திக்க பத்திரண அந்த உபகரணங்களை அன்பளிப்பு செய்வதை காணலாம்.

## மனிதாபிமானப் பண்புகள் இலங்கையில் தாராளம்

### அமெரிக்கத் தூதுவர் புகழாரம்

இலங்கையில் மனிதாபிமானப் பண்புகள் நிறைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதென இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் மிச்சேல் சிசன் தெரிவித்தார்.

கண்டியில் இயங்கும் ஆறு இளைஞர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கண்டி முஸ்லிம் இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற அநாதரவு மற்றும் விஷேட உதவிகள் தேவைப்படும் சிறுவர்களுடனான சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் உயர்ஸ்தானிகர் மேலும் கூறுகையில்,

நான் ஒரு இராஜதந்திரியாக முப்பது வருடங்கள் சேவை புரிந்துள்ளேன். எனது சேவைக்காலத்தில் கிறிஸ்தவ இளைஞர் சங்கம், முஸ்லிம் இளைஞர் சங்கம், பௌத்த இளைஞர் சங்கம், இந்து இளைஞர் சங்கம் எனக்கேள்விப்பட்டுள்ளேன்.

ஆனால் இந்த ஆறு இளைஞர் அமைப்பு பற்றி இதுவரை நான் கேள்விப்படவில்லை. இன்றுதான் நான் இதைப்பற்றிக் கேளவிப்படுகிறேன். எனவே, சிக்ஸ் வைய்ஸ் (6 Y'S) என்ற இவ்வமைப்பு தொடர்பாக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேவேளை, கடந்த 30 வருடகால யுத்தத்தை சந்தித்த உஙகளில் இன்னும் மனிதாபிமானம் இருப்பதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் எனத் தெரிவித்தார். இவ் வைபவத்தில் கண்டி நகர பிதா மற்றும் வை.எம்.எம்.ஏ. இயக்கத்தின் தலைவர் ஆகியோர் உரையாற்றியதுடன் அமெரிக்கத் தூதுவர் விஷேட தேவையுடைய சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கினார்.

### தமிழ்...

கனடாவில் வானமே எல்லையென்று தெரிவித்ததுடன், தான் தனது குடும்பத்துடன் கனடா வந்த புதிதில் தனது இரண்டு சிறுமகள்களிற்கும் தேவையானவற்றையும் செய்து கொண்டு எவ்வாறு அர்ப்பணிப்புக்களுடன் கல்வியை தொடர்ந்தார் என்பதையும் விளக்கியதோடு,

தற்போது 35 பேருக்கு வேலை வழங்கும் ஒரு நிறுவனமாக தனது நிறுவனம் வளர்ந்து நிற்பதையிட்டு மிகவும் பெருமை கொளவதாகவும், கனடாவிற்கு செல்லதான் எடுத்த முடிவு ஒரு சிறந்த முடிவென்பதையும் தெரிவித்தார்.

### பல்கலைக்கழக...

நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. பேராசிரியர் அமரர் துரைராஜா அவர்களின் முயற்சியுடன் சகல பல்கலைக்கழக சமூகத்தவரும் இணைந்து 1980 களில் உருவாக்கிய செயற்பாட்டுக்குழு செயலிழந்து போனமையையும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதைச் சிக்கலாக்கியுள்ளது.

இந்நிலையில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தை வலியுறுத்துமுகமாக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து அரைநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு சகல ஊழியர்களையும் வேண்டிக்கொள்கிறோம் என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் கைதிகளுக்கு விடுதலை வேண்டும்



(கொழும்பு)

பல ஆண்டுகளாக எந்தவித விசாரணையுமின்றி குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் கைதிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருவதை நாம் அவதானிக்கிறோம். இவர்கள் எந்தவித அர்த்தமும் இல்லாமல் தொடர்ந்தும் சிறைக்குள் அடைபட்டுத் துன்பப்படுகின்ற நிலைமையில்தான் இருக்கின்றார்கள்.

குறிப்பாக இவர்களது இளமைப் பருவம் நீண்ட காலமாகவே சிறையில் கழிகின்றது. அவர்கள் சிறியதொரு குற்றத்திற்காகப் பெரியதொரு தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றுதான் நான் கருதுகின்றேன்.

ஆகவே இவ்விடயத்தில் நீதி அமைச்சு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். அதேநேரம் அவர்களது வாழ்வில் ஒளியேற்ற அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த அவையிலே மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதித்துறையை அதற்குரிய அடிப்படைகளுடன் பேணுவதன் மூலமாகவே பதற்றமற்ற ஆட்சியையும் நிர்வாக ஒழுங்கமைப்பையும் மக்களுக்கு வழங்க முடியும். அநீதியான நடவடிக்கைகளின் மூலமும் அதிகாரத்தின் மூலமும் பாதிப்புக்குள்ளாவோரை நீதித்துறையே பாதுகாத்து நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கிறது. ஆகவேதான் நீதித்துறை ஒரு நாட்டின் உயிர்நாடி எனப்படுகிறது.

இதே வேளையில் இன்று எமது நாட்டிலே ஏராளமான வழககுகள் நீண்ட காலமாக உறங்கு நிலையில் அல்லது தாமத நிலையில் உள்ளன. இதனால் மக்கள் தங்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் உரிய இலக்கை எட்ட முடியாமல் சிரமப்படுகின்றனர்.

இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில் உள்ள பல அரசியற் கைதிகளின் வழக்குகளையும் தாக்கல் செய்து அவர்களின் மீதான விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும். இதன் மூலம் அந்தக் கைதிகளின் வாழ்வுரிமையை நாம் அங்கீகரிப்பதுடன் நீதித்துறையின் கடப்பாட்டையும் பேணி நிலைநிறுத்த முடியும்.

இந்த இடத்திலே தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நான எனது கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். நீண்ட காலமாக பல ஆண்டுகளாக எந்தவித விசாரணையுமின்றி குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் பலர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருவதை நாம் அவதானிக்கிறோம்.

உண்மையிலேயே அரசாங்கம் இன்று கிட்டத்தட்ட 12,000 விடுதலைப் புலிகளின் போராளிகளுக்குப் புனர் வாழ்வளித்து விடுதலை செய்திருக்கின்றது. அது நல்ல விடயம். இன்று சர்வதேசம் உட்பட எல்லோரும் அரசியலுக்கப்பால் அந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் நடந்து கொண்ட முறையைப் பாராட்டுகின்றார்கள்.

மேலும் இன்னுமொரு மிகப் பெரிய சவால் சுற்றுச்சூழல் பாதுகாப்பாகும். வாய்ப்புக்கள் கிடைக்கும்போதெல்லாம் இயற்கை வளங்களைத் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அழிக்கின்ற, பயன்படுத்துகின்ற ஒரு நிலைமை இன்று எமது நாட்டில் காணப்படுகின்றது. இதற்கேற்றவாறு பல இடங்களில் அதிகாரத் தரப்பினர்கூட ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள இயற்கை வளங்கள் நீண்ட காலம் நடைபெற்ற போரினால் பெருமளவு அழிவடைந்துள்ளன. மிஞ்சியிருக்கும் வளங்களைப் பேணிப் பாதுகாப்பதும் அவற்றை மேலும் வளர்த்தெடுப்பதும் இன்று மிக முக்கிய தேவையாகவுள்ளது. ஆனால் இதற்கு மாறாகவே அங்கு நிலைமைகள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# அத்துமீறிய ரோலர் மீன்ப

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் நேற்றைய தினமும் தடைசெய்யப்பட்ட ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த அறிவிப்பையும் மீறி மீன்வாகள் மீன்பிடியில் ஈடுபட்கின்றனர்.

இதனால் சிறுதொழில வர்கள் பெரிதும் பாதிக்க வருகின்றனர். அறிவிப யும் மீறி இவ்வாறு தெ மீன்பிடியில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள் மீ நடவடிக்கை எடுக்க வே என பாதிக்கப்பட்ட மீன கோரிக்கை விடுத்துள்ள

# மாமனாரைத் தாக்கியவரு விளக்கமறியல் உத்தரவ

கற்கோவளம் பகுதியில் மாமனாரைத் தாக்கி காயப்படுத்தி விட்டு தலைமறைவாக வாழ்ந்த மருமகனை பருத்தித்துறைப் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி கற்கோவளம் பகுதியில் மது போதையில் வந்த மருமகன் மாமனாரைத் தாக்கி காயப்படுத்தியுள்ளார். மாமனார் தற்போது யாழ். போதனா வைத்தி யில் சிகிச்சை பெற்று வ

இது தொடர்பாக விச களை மேற்கொண்ட ப துறை பொலிஸார் சந்தே கைதுசெய்துள்ளனர்.

இவர் நேற்று நீதி ஆஜர்படுத்தப்பட்டபோ வரும் 3 ஆம் திகதிவை விளக்கமறியலில் வை நீதிபதி உத்தரவிட்டார்.

# பிரேரணை நிராகரி

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவ யாழ். மாநகர சபை கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று தேசியக் கூட்டமைப்பு மாநகர சபை உறுப்பினர்களால் வரப்பட்ட பிரேரணை யாழ். மாநகர சபையில் நிராகரிக்கப்பட்

யாழ். மாநகர சபையின் மாதந்தக் கூட்டம் நேற்று மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் பல்கலை மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கண்டனத்தை தெ வேண்டும் என்றும் இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்ப இடம்பெறாமல் தடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் கூட்டமைப்பு மாநகர சபை உறுப்பினர் பரஞ்சோதியினால் பி ஒன்று சபையில் முன்வைக்கப்பட்டதுடன் அதன் பிரதிகள் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. எனினும் அப்பிரேரணை கரிக்கப்பட்டது.

# ஆசிரியர் சங்கம் கண்டன

யாழ். பல்கலைக்கழக மாணவர் மீது பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய தாக்குதலைக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது. சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான பேரணி மீது பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய தாக்குதலை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அரசாங்கம் அறிவித்து, மூன்று வருடங்களுக்கு மேல் காலம் கடந்துள்ள நிலையில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுமாயின், பிரதேசம் இயல்பு நிலைமைக்குத் திரும்பவில்லை என்பதையே காட்டுகிறது.

கடந்த காலங்களில் வடக்கில் நடத்தப்பட்ட பல்வேறு ஆர்ப்பாட்டங்களின் போது, கறுப்பு எண்ணெய் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டத்தைச் செயற்படுத்தவில்லை. இவ்வாறான தல்கள், இலங்கையில் ஜ கம், பேச்சுரிமை, அமை ஆர்ப்பாட்டங்களை ந உரிமை மீறப்பட்டுள்ள வெளிகாட்டியுள்ளன.

யாழ். பல்கலைக்கழக வர்கள் மீது நடத்தப்பட்ட குதலுக்கு எதிராக ஜ கத்தை மதிக்கும் அ சக்திகளும் குரல் செ வேண்டும் எனவும் வட மக்களுக்கு ஜனநாயகத் படுத்திக் கொடுப்பதா கொடுக்க வேண்டும் எ ஜோசப் ஸ்டாலின் தனது கையில் கூறியுள்ளார்.

# தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாக்கக் கோரிக்கை



கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாக்குமாறு பொதுபல சேன அமைப்பினர் அரசாங்கத்திடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மகிந்த பாலசூரியவுடன் தொல்பொருள் திணைக்களத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் அடுத்த வருட ஜனவரி மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் என தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மகிந்த பாலசூரிய இதன்போது பௌத்த தேரர்களிற்கு உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி சேனரத் திசாநாயக்கவும் கலந்துகொண்டார். இதே வேளை, அம்பாறை - திருக்கோவிலுள்ள தொல்பொருள் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் சுமார் ஏழு பேர் கடந்த ஞாயிறுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இந்த புதையல் தோண்டல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுபல சேன அமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். தேசிய நூதனசாலைக்கு முன்னாள் ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினை அடுத்தே தொல்பொருள் திணைக்களத்தில் தேசிய மரபுரிமைகள் அமைச்சருடனான பேச்சுவார்த்தையில் பொதுபல சேன அமைப்பினர் கலந்துகொண்டனர்.

# மின்தடை பற்றிய அறிவித்த

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் புதிய மின்மாற்றி நிறுவுவதற்காகவும் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் உடுப்பிட்டி நூலகத்திலிருந்து வீரபத்திரர் கோவிலடி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார் தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி, மனோகரா பிரதேசம், குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு, உடுப்பிட்டி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்

2.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார் தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி, மனோகரா பிரதேசம், உடுப்பிட்டி முதல் வீரபத்திரர் கோவில் வரையான பிரதேசம், நல்லூரிலிருந்து ஆனைப்பந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்

3.12.2012 திங்கட்கி காலை 8.30 மணியிலி மாலை 5.30 மணி வரையு தனார்மடம், உடுவில், வேலி, மானிப்பாய், கட் சுதுமலை, ஆனைக்கோ நவாலி, மாலுசந்தியிலி வதிரி சந்தி வரையான பிர ஆகிய இடங்களிலும்

04.12.2012 செவ்வாய்க் காலை 8.30 மணியில மாலை 5.30 மணிவரையு தனார்மடம், இணுவில், டாவில், தாவடி, குளப்பிட் தேசம், கொக்குவில், நா கோவிலடி, கோம்பயன் பிரதேசம், வீரவாணி, குஞ்சர் கடையின் ஒரு நவிண்டில், பொலிகண்டி வெட்டி, வல்வெட்டித் தொண்டைமனாறு, உடு ஆகிய இடங்களிலும் விநியோகம் தடைப்பட்டிரு என அறிவிக்கப்பட்டுள்ள

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்ட